வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer - மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER - றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER - வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 10.12.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 344 பக்கங்கள் : 12

## யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அர்ச்சுனா எம்.பிக்கு எதிராக நேற்று முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 10

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தியால் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு நேற்றுப் பிற்பகலில் மேற்கொள்ளப்பட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். போதனா வைத்தியசாலைக்குள் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா அனுமதியின்றி நுழைந்து கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததோடு, தம்மை அச்சுறுத்தினார் என வைத்தியர் த. சத்தியமூர்த்தி முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்த முறைப்பாடு தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சுகாதாரத் தொண்டர்களின் கடிதம் மூலமான அழைப்பின் பேரிலேயே தான் வைத்தியசாலைக்குச் சென்றதாக பாராளுமன்ற உறுப்பினரும், வைத்தியருமான

11

## யாழ்ப்பாணத்தில் 35 வீடுகளை உடைத்து 66 மில்லியன் ரூபா சொத்துகள் திருட்டு!

### 300 பவுண் நகை, ரூ. 60 இலட்சம் பணம் மீட்பு
### யாழ். உதவி பொலிஸ் அத்தியட்சகர் தகவல்



யாழ்ப்பாணம், டிசெ. 10

யாழ்ப்பாணத்தில் 35 இற்கும் மேற்பட்ட வீடுகளை உடைத்து 66 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான பெறுமதியுடைய சொத்துகளை திருடிய நபர்

கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவரிடமிருந்து 300 பவுண் தங்க நகைகளையும் சுமார் 60 இலட்சம் ரூபாய் பணத்தையும் மீட்டுள்ளதாகவும்

11

# வழிகாட்டி சரியாக நடக்காவிட்டால் மக்களுக்கு நீதி நிலைநாட்டப்படாது!

### ஊழல் எதிர்ப்பு தின தேசிய நிகழ்வில் ஜனாதிபதி



கொழும்பு, டிசெம்பர் 10

**எத்தனை சட்டங்கள் இயற்றினாலும், எத்தனை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டாலும், அவற்றை வழிநடத்துபவர்கள் சரியாகச் செயல்படாவிட்டால், குடிமக்களுக்கு நீதி நிலைநாட்டப்படாது என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.**

மக்களால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களுக்கு நீதி வழங்கப்படாவிட்டால், அந்த அதிகாரம் பயனற்றதாகிவிடும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற 2024 சர்வதேச ஊழல் எதிர்ப்பு தின தேசிய நிகழ்வில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதற்கு போதுமான சட்டங்களும் நிறுவனங்களும் இருந்த போதும் இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதற்கு இந்தச் சட்டம் பயன்படுத்தப் பட் டுள்ளதா என்பதை தமது மனசாட்சியிடம் கேட்க வேண்டுமெனவும் ஜனாதிபதி கூறினார்.

அத்துடன் ஊழல் மற்றும் இலஞ்சம் என்பன சமூக அவலமாக மாறியுள்ளது.

11

## ஜனவரி மாத முற்பகுதியில் ஜனாதிபதி சீனா பயணம்!

கொழும்பு, டிசெ. 10

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் 16 ஆம் திகதி டில்லி செல்லவுள்ள நிலையில், இந்திய பிரதமருடனான இரு தரப்பு சந்திப்பின்போது புதிய அரசாங்கத்தின் கொள்கைகள் பற்றி தெளிவுபடுத்தவுள்ளார் என தெரியவருகின்றது.

இந்திய விஜயத்தின் பிறகு ஜனவரி முற்பகுதியில் சீனாவுக்கும் பயணம் மேற்கொள்ள ஜனாதிபதி அநுர திட்டமிட்டுள்ளார்.

11

## ஆலை உரிமையாளர்களின் தரகராக ஜனாதிபதி அநுர!

### சமிந்த விஜேசிறி எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 10

நாட்டில் உள்ள ஆலை உரிமையாளர்களின் தரகராக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க செயற்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டில் ஊழலை ஒழித்து தனி மனித

11

## மதுபான அனுமதிப்பத்திரம் இலவசமாக வழங்கவில்லை

### கூறுகிறார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, டிசெ. 10

2024ஆம் ஆண்டில் அப்போதைய அரசாங்கத்தினால் 4 பில்லியன் ரூபாய் வருமானத்தை ஈட்டக்கூடிய வெளிப்படையான வேலைத் திட்டத்தின் கீழ் மதுபான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டு 361 மதுபானசாலை அனுமதிப்பத்திரங்கள் கடந்த அரசாங்கத்தினால்

11

## 3 நாட்கள் காய்ச்சல் காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழப்பு!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், டிசெ. 10

யாழ்ப்பாணத்தில் காய்ச்சல் காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். வரணி வடக்கு, வரணி பகுதியைச் சேர்ந்த கோகிலன் தவராசா (வயது 60) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் தொடர்ந்து மூன்று தினங்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார். காய்ச்சலுக்கு வரணி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். பின்னர் மூச்சு விட அவருக்கு சிரமம் ஏற்பட்டது. இந்நிலையில் சிகிச்சைக் காக மந்திகை வைத்தியசாலைக்கு

11

## வரவு - செலவுத் திட்டத்தில் வற் குறைக்க தீர்மானம்?

கொழும்பு, டிசெ. 10

எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் வற் வரியை குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதியும் கிடைத்துள்ளதாக அரசாங்க உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு வற் அதிக வீதத்தாலும்

11

## சர்வதேச மனிதஉரிமை தினத்தை முன்னிட்டு வடக்கு - கிழக்கில் இன்று பெரும் போராட்டம்!

### காணாமற்போனோரின் உறவுகள் அழைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 10

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் பாரிய கவனயீர்ப்புப் போராட்டம் இன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடியும் அவர்களுக்கு நீதி கோரியும் கடந்த பல வருடங்களாக உறவுகள் போராட்டங்களை

11

## 10 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியுடன் இந்தியக் கப்பல் கொழும்பு வருகின்றது

கொழும்பு, டிசெ. 10

இந்தியாவின் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து அனுப்பப்பட்ட 10,000 மெற்றிக் தொன் அடங்கிய கப்பல் அரிசி கொழும்பு துறைமுகத்தை அண் மித்துள்ளதாக அத்தியாவசிய உணவு இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சந்தையில் நிலவும் அரிசி தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக இந்தியாவிலிருந்து 70 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியைத் தற்காலிகமாக இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில், அரிசி இறக்குமதிக்கான வரையறைகளையும் தற்காலிகமாக நீக்கியுள்ளது.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மத்திய வங்கியில் மாயமான 5 மில்லியன் ரூபாய்

## விசாரணைகள் மீளவும் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 10

2023 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியில் இருந்து 5 மில்லியன் ரூபா காணாமல் போனமை தொடர்பிலான குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகள் ஆரம்பிக்கப்படுவதாக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அதன் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இமேஷா முத்துமால தெரிவித்துள்ளார்.

2023 ஏப்ரல் 11 மாதம் நாணயச் செயல்பாடுகளின் போது அதன் பெட்டகங்களில் ஒன்றிலிருந்து 5 மில்லியன் ரூபா காணாமல் போனதாகக் கூறி, மத்திய வங்கியினால் உள்ளக விசாரணை ஆரம்பிக்கப்பட்டதாகவும், கோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அந்த நேரத்தில், மத்திய வங்கி இந்த சம்பவத்தை முழுமையாக ஆராய்ந்து அதன் உள் கட்டுப்பாடுகள், செயல்முறைகள் போன்றவற்றை பலப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்ததாக இமேஷா முத்துமால குறிப்பிட்டார்.

பொலிஸாரின் தொடர்ச்சியான விசாரணைகளுக்கு மத்திய வங்கி தொடர்ந்து உதவுவதாக உறுதியளித்துள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

# யாழ்.மாவட்ட செயலகத்தில் இன்று பிறப்பு சான்றிதழ் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், டிசெ. 10

பிறப்புச் சான்றிதழ் வழங்கும் நடமாடும் சேவை இன்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளதாக மாவட்ட பதில் செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

அதன்படி, இன்று காலை 9:00 மணி முதல் மாலை 4:00 மணி வரை பிறப்பு சான்றிதழ் வழங்கப்படும்.

அதன்படி, இதுவரை பிறப்புச் சான்றிதழைப் பதிவு செய்யாத குழந்தைகளுக்கான பிறப்புச் சான்றிதழ் வழங்கும் சேவையும் இடம்பெறவுள்ளதாக பதில் மாவட்ட செயலாளர் குறிப்பிட்டார்.

இதுவரை பிறப்புச் சான்றிதழ் பெறாதவர்கள் உரிய ஆவணங்களுடன் நாளை சேவையைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு பதில் மாவட்ட செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

# வவுனியா கோவில்குளத்தில் முதியவரின் சடலம் மீட்பு

வவுனியா, டிசெ. 10

வவுனியா கோவில்குளம் சந்தி அருகில் அமைந்துள்ள கடைத்தொகுதிக்கு முன்பாக முதியவர் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா கோவில்புதுக்குளத்தை சேர்ந்த எம். விஜயரத்தினம் (வயது - 63) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இதேவேளை, குறித்த சடலத்தை திடீர் மரண விசாரணை அதிகாரி லா. சுரேந்திரசேகரன் பார்வையிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# கிளிநொச்சியில் பால்நிலை வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று

கிளிநொச்சி, டிசெ. 10

கிளிநொச்சியில் மகளிர் விவகார அமைச்சின் மேலதிக செயலாளரின் பங்கு பற்றலுடன் பால்நிலை வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று நடைபெற்றது. பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுப்பதற்கான செயற்பாட்டு வாரம் கடந்த 25 ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும் நிலையில், இந்த கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

மகளிர் விவகார அமைச்சின் மேலதிக செயலாளர் டபிள்யூ. நில்மினி ஹேரத்தின் பங்குபற்றலுடன் நேற்று காலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் கருத்தரங்கு ஆரம்பமானது.

இதில் மேலதிக மாவட்ட செயலாளர் இன்பராஜ் நளாயினி, பிரதித் திட்டமிடல் மற்றும் கண்காணிப்புக்குரிய பணிப்பாளர் கே.பி.சுபாஜினி, மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்ட செயலகத்தின் துறை சார் உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (அ)

# முட்டையை தட்டுப்பாடின்றி விநியோகிக்க நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 10

நாடளாவிய ரீதியில் முட்டைகளை தட்டுப்பாடின்றி சந்தைக்கு வெளியிடுவதற்கு முட்டை உற்பத்தியாளர்கள் செயற்பட்டு வருவதாக இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்தார்.

நாட்டில் தற்போது முட்டை ஒன்றின் சில்லறை விலை 35 முதல் 36 ரூபாய் வரை விற்பனையாகிறது.

எவ்வாறாயினும், நாட்டின் தேவை மற்றும் விநியோகத்துக்கு ஏற்ப முட்டையின் விலை தீர்மானிக்கப்படுவதால், எதிர் வரும் பண்டிகைக் காலத்தில் முட்டையின் தேவை அதிகரிக்கலாம்.

இதன்படி, முட்டை ஒன்றின் சில்லறை விலை 45 ரூபாவுக்கும் குறைவாகவே தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

தேவேளை, தற்போது அரிசி மற்றும் சோளத்தின் விலை உயர்வினால் முட்டை ஒன்றின் உற்பத்தி விலையும் அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கோழி இறைச்சி உற்பத்தி உபரியாக இருப்பதால், கோழி இறைச்சியை தட்டுப்பாடு இன்றி சந்தைக்கு வெளியிடுவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அஜித் குணசேகர தெரிவித்தார். (அ)

# லால்காந்த பொதுமக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும்!

## சீலரத்ன தேரர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 10

வன விலங்குகளை கொலை செய்ய வேண்டுமெனக் கூறியுள்ள அமைச்சர் லால்காந்த பொதுமக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என ஜனசத பெரமுண கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பயிர்களை நாசம் செய்யும் விலங்குகளை கொலை செய்யுமாறு அமைச்சர் லால்காந்த தெரிவித்துள்ளார். அவர் எந்த அடிப்படையில் அவ்வாறு கூற முடியும்? எமது விகாரையில் உள்ள தேங்காய்களை குரங்குகள் பறிக்கின்றன. அதற்காக அவற்றை நான் கொல்லலாமா? அவ்வாறாயின் நான் சட்டத்துக்கு கட்டுப்படவில்லை என்றுதானே அர்த்தம்? அமைச்சர் லால்காந்த பொறுப்பற்ற விதத்தில் கருத்துகளை தெரிவித்துள்ளார்.

குரங்குகளை கொலைசெய்ய வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்றால் அதனை வர்த்தமானியில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (அ)

# சிவாஜிலிங்கம் வைத்தியசாலையில்!

கொழும்பு, டிசெ. 10

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய கட்சியின் செயலாளர் நாயகமுமான எம்.கே.சிவாஜிலிங்கம் நேற்று கொழும்பு வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது. (அ)

# நாளொன்றுக்கு 107 பேர் டெங்கு நோயால் பாதிப்பு



கொழும்பு, டிசெ. 10

நாளொன்றுக்கு 107 பேர் டெங்குநோய்த்தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக டெங்கு கட்டுப்பாட்டுப்பிரிவு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழையுடனான கால நிலையின் காரணமாக டெங்குநோய் தொற்று அதிகரித்து வருவதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இம்மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 858 பேர் டெங்குநோய் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

அதேவேளை இவ்வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் டெங்குநோய்த்தொற்றுக்குள்ளாகி 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

அந்த வகையில் மேல்மாகாணத்தின் கொழும்பு , கம்பஹா ஆகிய மாவட்டங்களும் வட மாகாணத்திக் யாழ்ப்பாணம் மாவட்டத்திலுமே அதிகளவிலானோர் டெங்குநோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

அதற்கமைய கொழும்பு மாவட்டத்தில் 11,685 பேரும்,கம்பஹா மாவட்டத்தில் 5732 பேரும் யாழ்.மாவட்டத்தில் 4344 பேரும் டெங்கு நோய்த்தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

# கரையோர ரயில் சேவை தாமதம்!

கொழும்பு, டிசெ. 10

தண்டவாளம் உடைந்ததன் காரணமாகக் கரையோர மார்க்கத்திலான ரயில் போக்குவரத்து சேவையில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கல்கிஸை மற்றும் இரத்மலானை ரயில் நிலையங்களுக்கு இடையில் தண்டவாளம் உடைந்ததன் காரணமாக இந்த தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், கொழும்பு கோட்டை வரை இயங்கிய அனைத்து அலுவலக ரயில்களும் தாமதமின்றி இயக்க முடிந்ததாகத் ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# கிளிநொச்சி பிராந்திய பொலிஸ் அத்தியட்சகராக சிசிர பெத்திர



கிளிநொச்சி, டிசெ. 10

புதிதாக நியமிக்கப்பட்ட கிளிநொச்சி பிராந்தியத்திற்கான பொலிஸ் அத்தியட்சகராக சிசிர பெத்திர தந்திரி இரணைமடுவிலுள்ள பொலிஸ் அலுவலகத்தில் தனது கடமைகளை நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் வரவேற்பு மரியாதையைத் தொடர்ந்து சர்வமத வழிபாட்டுடன் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

குறித்த கடமையேற்பு நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இவர் இதற்கு முன்பு தங்காலை பிராந்தியத்திற்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றிருந்தார்.

ஏற்கனவே இங்கு கடமையாற்றிய உயல் செனவிரத்ன தங்காலை பிராந்தியத்திற்கு சென்றுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 09.12.2024 திங்கட்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# புதிய அரசியலமைப்பு

புதிய அரசியலமைப்பில் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு உறுதிப்படுத்தப்படும் என்று, தேசிய மக்கள் சக்தியின் பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருக்கின்றார். ஓர் அமைச்சர் என்னும் வகையில் அவரிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு, அவருக்கு தெரிந்தவாறு பதிலளித்திருக்கின்றார். புதிய அரசியலமைப்பு ஒன்றை கொண்டுவருவதற்கான நாடாளுமன்றப் பெரும்பான்மையும் அதேவேளை, அதனை சர்வஜன வாக்கெடுப்பிற்கு விடுவதற்கான மக்கள் ஆதரவும் தேசிய மக்கள் சக்தியிடம் இருக்கின்றது என்பது எந்தளவிற்கு உண்மையோ அதேயளவு உண்மை சிங்கள மக்கள் பெரும்பான்மையாக அநுரவிற்கு வாக்களித்திருக்கின்றமை புதிய அரசியல் யாப்பு ஒன்றை அவர் கொண்டுவர வேண்டும் என்னுமடிப்படையில் அல்ல - மாறாக, மக்களின் அடிப்படையான வாழ்வாதார பிரச்னைகள், பொருளாதார முன்னேற்றம் அத்துடன் ஊழலற்ற அரசாங்கம் இவ்வாறான மாற்றங்களை எதிர்பார்த்துத் தான் அவர்கள் வாக்களித்திருக்கின்றனர். ஆனால், தற்போதுள்ள நிலையில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்துச் செல்கின்றன - இதனை சமாளிப்பதே அநுர அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் முதன்மையான பிரச்னையாக இருக்கப் போகின்றது.

தேசிய மக்கள் சக்தியிடமிருந்து பல மாற்றங்களை சிங்கள மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதனை முடிந்தவரையில் நிவர்த்தி செய்வதுதான் அவர்களின் முதன்மையான பிரச்னையாகும். ஜனாதிபதித் தேர்தலின் போதும், நாடாளுமன்றத் தேர்தலின் போதும் அநுரகுமார திஸநாயக்க மற்றும் ஜே.வி.பியின் தலைவர்கள் தொடர்ந்து ஒரு விடயத்தையே வலியுறுத்தி வந்தனர் - அதாவது, திருடர்களை சட்டத்தின் முன் நிறுத்துவோம் - இனி ஊழலுக்கு இந்த நாட்டில் இடமில்லை - ஆனால், அதிகாரத்தை கைப்பற்றியதைத் தொடர்ந்து குறித்த விடயத்தில் ஆழ்ந்த அமைதியை கடைப்பிடித்து வருகின்றனர். பொதுஜன பெரமுனவினர் தாங்கள் செய்த திருட்டுக்கள் என்ன என்று அறிந்து அவற்றை மக்களுக்கு வெளிப்படுத்துங்கள் என்று சவால்விடுமளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன.

அநுர அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் முதலாவது சவால் அவர்கள் முன்னைய ஊழல் ஆட்சியாளர்களை மக்கள் முன்னால் அம்பலப்படுத்த வேண்டும். ஆனால் ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதில் அவர்களது அணுகுமுறை மிகவும் மந்தகதியாகவே இருக்கின்றது. அத்துடன், அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றனவா என்பது அடுத்த பிரச்னை. ஏனெனில் பல அரசியல்வாதிகள் மீது குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன ஆனால் அவற்றை நிரூபிப்பதற்கான ஆதாரங்களை எவ்வாறு திரட்டுவது?

அநுர அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை முதலில் அவர்கள் கட்டியெழுப்பினால்தான், அடுத்த விடயங்களை நோக்கிச் செல்ல முடியும். சிங்கள மக்கள் எதற்காக தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்களோ அவற்றைப் புறம்தள்ளி புதிய அரசியல் யாப்பிற்கு சென்றால், அதனை எதிர்த்தரப்புகளால் மிகவும் இலகுவாக குழப்பிவிட முடியும்.

இலங்கைத் தீவில் மாற்றங்களை ஏற்படுத்துவது அவ்வளவு இலகுவான அரசியல் இலக்கு அல்ல - மிகவும் சிக்கலான இலக்கு. இந்த நிலையில் புதிய அரசியல் யாப்பு முயற்சியே அநுர அரசாங்கத்தின் வீழ்ச்சியின் ஆரம்பமாகவும் இருக்கலாம். இவற்றை எல்லாம் கணிக்காமல் தேசிய மக்கள் சக்தியும் செயல்படப் போவதில்லை. இந்தப் பின்புலத்தில் நோக்கினால், புதிய அரசியல் யாப்பில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு - அதிலும் தமிழ் மக்கள் விரும்புகின்ற அரசியல் தீர்வு என்பது வெறும் வார்த்தைகளாகவே சுருங்கிப் போகும்.

### யாழ்ப்பாணத்தில் சொத்து கேட்டு

# தாய் மற்றும் 13 வயது சிறுவன்மீது தாக்கிய நபர் பொலிஸாரால் கைது

*யாழ்ப்பாணம், டிசெ. 10*

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி பகுதியில் தாயையும் அவரின் 13 வயது மகனையும் கொடூரமாக தாக்கிய நபர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுவன் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைவாக இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

கணவனை பிரிந்த பெண்ணும் அவரது மகனும் தனியாக வசித்து வந்துள்ளனர். இதன்போது பளை பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் அராலி பகுதியில் உள்ள அவரது சகோதரி வீட்டுக்கு வந்திருந்தபோது, அவருக்கும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கும் இடையே தொடர்பு ஏற்பட்ட நிலையில் அந்தப் பெண்ணின் வீட்டில் வசித்து வந்துள்ளார்.

அங்கு தங்கியிருந்த சில மாதங்களின் பின்னர் அந்த வீட்டினை தனது பெயருக்கு எழுதித் தருமாறு கேட்டு குறித்த பெண் மீதும், அந்தப் பெண்ணின் மகனான சிறுவன் மீதும் தாக்குதல் நடத்தி வந்துள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அவரது தாக்குதலால் அந்த பெண்ணுக்கு தலையில் பாதிப்பு ஏற்பட்டு மனநலக்குறைவு ஏற்பட்டுள்ளது. தாக்குதல் நடத்திய சந்தேகநபர் தனது தாக்குதல் மூலமே அந்த பெண்ணுக்கு இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளதாக அயல்வீட்டாருக்கு கூறியுள்ளார்.

இதன்பின்னர் அந்த பெண் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் சிறுவன் மீதும் தாக்குதல் நடத்தி, சிறுவனை வீட்டை விட்டு துரத்தியுள்ளார்.

குறித்த சிறுவன் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்த வேளை, அந்த சிறுவனை மல்லாகம் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தினர். இதன்போது, அந்த சிறுவனை சிறுவர் இல்லத்தில் சேர்ப்பிக்குமாறும், சந்தேக நபரை கைது செய்யுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அந்தவகையில் பளை பகுதியில் தலைமறைவாகி இருந்த குறித்த நபர் மீண்டும் நேற்றைதினம் அராலி பகுதிக்கு வந்திருந்தவேளை வட்டுக்கோட்டை பொலிஸார் அவரை கைது செய்தனர். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளின்போது அவர் ஐந்துக்கும் மேற்பட்ட திருமணங்கள் செய்துள்ளதாக தெரியவந்துள்ளது. விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-05)

## மூளாயில் கசிப்புடன் இளைஞன் கைது!

*யாழ்ப்பாணம், டிசெ. 10*

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூளாய் - வேரம் பகுதியில் ஒரு போத்தல் கசிப்புடன் 24 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த நபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

## ஹாட்லி அதிபர் கலைச்செல்வனுக்கு பழைய மாணவர் பணி எழில் விழா!

*யாழ்ப்பாணம், டிசெ. 10*

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் தம்பையா கலைச்செல்வனின் பணி எழில் விழா எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 09 மணிக்கு பருத்தித்துறை சூரியமஹால் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


ஓய்வுநிலை அதிபர் த. கலைச்செல்வனிடம் கற்ற மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கணக்கியற்றுறை சிரேஷ்ட பேராசிரியர் பா. நிமலதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

1994 ஆம் ஆண்டு முதல் ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய த. கலைச்செல்வன் 2021 ஆம் ஆண்டு முதல் அதிபராகப் பொறுப்பேற்று, கல்லூரியின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க ஒருவராக மிளிர்ந்து எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார். .


இவர், ஆசிரியராக, பகுதித் தலைவராக, அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் கல்லூரி மாணவர்களிடையே நற்பண்புகளை வளர்ப்பதிலும், கல்லூரியின் நற்பெயரைக் கட்டிக்காப்திலும் அரும் பங்காற்றியவர்.

குறிப்பாக கல்லூரி கல்வி, விளையாட்டு மற்றும் இணைப்பாட விதானச் செயல்பாடுகளில் தொடர்ந்தும் முன்னிலை வகித்தமைக்கு இவரது பங்கு குறிப்பிடத்தக்கதாகும். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கணவன் - மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். எதிர்பார்த்த உதவிகள் தாமதமாகக் கிடைக்கும். சாலைகளை கவனமாக கடந்துச் செல்லுங்கள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**இடபம்**
எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணம் கிடைக்கும்.

**மிதுனம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். உறவினர், நண்பர்களின் வருகையால் உற்சாகம் அடைவீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். அடுத்தவர்களை குறைக் கூறிக் கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப் பாருங்கள்.

**கன்னி**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். விலை உயர்ந்தப் பொருட்கள் வாங்குவீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி வரும். தாயாரின் உடல்நிலை சீராகும்.

**துலாம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். நீண்ட நாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார்.

**விருச்சிகம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். கனவு நனவாகும் நாள்.

**தனுசு**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். யோகா தியானத்தில் மனம் செல்லும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். ஆதரவுக்கிடைக்கும்.

**மகரம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். அதிகாரப்பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள்.

**கும்பம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். புது நட்பு மலரும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். சிலரின் தவறுகளை சுட்டிக் காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள். பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டிய நாள்.

# சிராட்டிகுளம் பிரதான வீதியை உடன் புனரமைத்துத் தாருங்கள்

## ரவிகரன் எம். பியிடம் மக்கள் கோரிக்கை



முல்லைத்தீவு, டிசெ. 10

சிராட்டிகுளம் கிராமத்துக்குச்செல்லும் பிரதான வீதியை புனரமைத்துத் தருமாறு பாராளுமன்ற உறுப்பினர் து. ரவிகரனிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சிராட்டிகுளம் பகுதியில் ரவிகரன் எம். பி. மக்கள் குறைகேள் சந்திப்பொன்றை நடத்தினார்.

குறித்த கிராமமானது முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப்புறக் கிராமம் என்பதுடன், வெள்ள அனர்த்தத்தின்போது இந்தக் கிராமத்துக்குச் செல்வதற்கான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டிருந்ததால், குறித்த சிராட்டிகுளம் கிராமம் தனிமைப்பட்டிருந்தது.

இதனால் குறித்த கிராம மக்கள் பெருத்த இன்னல்களுக்கு முகங்கொடுத்து வந்தனர்.

இந்த நிலையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் குறித்த கிராமத்துக்கு சென்று மக்களின் குறைகளைக் கேட்டறிந்துள்ளார்.

இதன்போது, சிராட்டிகுளம் கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதிச்சீரமைப்பு, நெல் உலரவிடும் தளம் அமைத்தல், யானைவேலி அமைத்தல், சிராட்டிகுளம் மாதிரிக் கிராமத்தில் தாழ்நிலப் பகுதியில் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளமையால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள், பொதுப் போக்குவரத்துப் பிரச்னை, வனவளத் திணைக்களத்தால் மக்களின் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளமை உள்ளிட்ட விடயங்கள் இதன்போது மக்களால் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

அந்தவகையில் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் தனித்தனியே கடிதங்களை தன்னிடம் கையளிக்குமாறு தெரிவித்ததுடன், உரிய தரப்பினருடன் பேசி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும், குறித்த மக்கள் சந்திப்பில் சமூக செயல்பாட்டாளர்களான யோகானந்தராசா, உதயகுமார் ஆகியோரும் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனுடன் மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டனர். (எ)

# கராத்தே போட்டியில் பதக்கம் வென்ற தமிழ்நிலவனுக்கு கௌரவிப்பு நிகழ்வு




கிளிநொச்சி, டிசெ. 10

தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கராத்தே போட்டியில் பதக்கம் வென்ற விஜயராஜ் தமிழ்நிலவனைக் கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சியிலுள்ள வடமாகாண விளையாட்டுக் கட்டடதொகுதியின் உள்ளக அரங்கில் நடைபெற்றது.

சிரேஷ்ட கராத்தே பயிற்றுநர் எம். இரத்தின ஜோதி மாணவனை கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் தேசிய கராத்தே சங்கத்தின் பிரதிநிதிகள், மாவட்ட பயிற்றுநர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (எ)

# பல வர்த்தக நிலையங்களில் சோதனை

கிளிநொச்சி, டிசெ. 10

கிளிநொச்சி மாவட்டத்தில் பல வர்த்தக நிலையங்களில் மாவட்ட அளவீட்டு அலகுகள் திணைக்களத்தினரால் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஸ்கந்தபுரம், அக்கராயன், வட்டக்கச்சி, பரந்தன் மற்றும் கிளிநொச்சி நகரப்பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள், அரிசி ஆலைகள், எரிபொருள் நிரப்பு நிலையம், மீன்சந்தை, பழக்கடைகள் மற்றும் தேங்காய் மொத்த விற்பனை நிலையம், நகைக்கடைகள், பல்பொருள் அங்காடிகள் போன்றவற்றில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் மூலம் உரிய காலத்தில் முத்திரையிடப்படாத மற்றும் அரச அனுமதியற்ற தராசுகள் திணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்டன. (எ)

# நெடுந்தீவில் கடற்படையினரால் 126 கிலோ கேரளக் கஞ்சா மீட்பு!



யாழ்ப்பாணம், டிசெ. 10

யாழ்ப்பாணம், நெடுந்தீவு கடற்பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது 126 கிலோ 300 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இலங்கை கடற்படை வசபா நிறுவனத்துக்குச் சொந்தமான கரையோர ரோந்து கப்பல்கள் நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையின் போது கடல் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் 44 பொலித்தீன் பொதிகள் மிதப்பதை அவதானித்து அவற்றை மீட்டு சோதனைக்கு உட்படுத்தினர்.

இதன்போதே 126 கிலோ 300 கிராம் கேரளக் கஞ்சா, கடற்படையினரால் கைப்பற்றப்பட்டதுடன், கஞ்சா கையிருப்பை தரையிறக்கும் போது கடற்படை நடவடிக்கை காரணமாக கைவிட்டு தப்பிச் சென்றிருக்கலாம் என நம்பப்படுகிறது. இந்த கஞ்சா தொகையின் பெறுமதி சுமார் 50 மில்லியன் ரூபாயாக இருக்குமென கடற்படை தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான சட்டமூலம் ஜனவரியில் முன்வைப்பு

கொழும்பு, டிசெ. 10

**உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு புதிதாக வேட்புமனு கோருவதற்குரிய சட்டமூலம் எதிர்வரும் ஜனவரி மாதம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளதென தெரிய வருகின்றது.**

ஏற்கனவே பெறப்பட்ட வேட்புமனுக்களை இரத்து செய்து, புதிதாக வேட்புமனு கோருவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. கட்சி தலைவர்கள் கூட்டத்திலும் இதற்கு இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டத்தில் இதற்குரிய திருத்தங்கள் பற்றி சட்டமா அதிபரிடம் அரசாங்கம் ஆலோசனை கோரியுள்ளது.

அந்த சட்ட விளக்கம் கிடைக்கப்பெற்ற பின்னர் ஜனவரி மாதம் அளவில் சட்டதிருத்த யோசனை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

தேர்தல் முறைமையிலோ அல்லது உறுப்பினர்கள் எண்ணிக்கையிலோ மாற்றம் வராது. வேட்பு மனுக்கள் மாத்திரமே புதிய ஏற்பாட்டின் பிரகாரம் இரத்து செய்யப்படவுள்ளது. (அ)

# 2025 இல் நாட்டின் மொத்த ஏற்றுமதி இலக்கு 18.7 பில்லியன் டொலர்கள்!

கொழும்பு, டிசெ. 10

**2025 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானம் 18.7 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்கும் என இலங்கையின் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை கணித்துள்ளது.**

இவ்வாண்டின் முதல் 10 மாதங்களில், மொத்த ஏற்றுமதிகள் (வணிகப் பொருட்கள் மற்றும் சேவைகள்) மூலம் இலங்கை 13.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டியுள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க தெரிவித்தார்.

இது 2023 இன் முதல் 10 மாதங்களுடன் ஒப்பிடுகையில் 7.19 சதவீதம் அதிகமாகும்.

2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இலக்கு 16.4 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும், ஆண்டின் முதல் 10 மாதங்களில் இலங்கை அந்த இலக்கில் 82 வீதத்தை அடைந்துள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# காற்று மாசு அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 10

நாட்டின் பல பகுதிகளில் காற்றின் தர நிலை நேற்றும் சற்று சாதகமற்றதாக இருந்தது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று நாடு முழுவதும் காற்றின் தரம் 90 முதல் 180 வரை இருக்கலாம் என தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பின் சுற்றுச்சூழல் ஆய்வுகள் மற்றும் சேவைகள் பிரிவு வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

அதன்படி யாழ்ப்பாணம் மற்றும் பொலனறுவை நகரங்களில் காற்றின் தர சுட்டெண் சாதகமற்ற மட்டத்தில் இருப்பதாகவும், பல பகுதிகளில் காற்றின் தர சுட்டெண் சாதகமற்ற நிலைக்கு உயரலாம் என்றும் கூறப்படுகிறது.

மேலும் தற்போதைய நிலவரப்படி நுவரெலியா, களுத்துறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய நகரங்களில் மாத்திரம் காற்று மாசு மிதமான நிலையில் உள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பின் சுற்றாடல் கற்கைகள் மற்றும் சேவைகள் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# 2138 மாலுமிகளுக்கு நேற்று பதவி உயர்வு!

கொழும்பு, டிசெ. 10

இலங்கைக் கடற்படை தனது 74 ஆவது ஆண்டு நிறைவை நேற்று கொண்டாடியது.

இதனை முன்னிட்டு, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவின் பரிந்துரையின் பேரில், கடற்படையின் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில், 2138 சிரேஷ்ட மற்றும் சாதாரண மாலுமிகள் நேற்று முதல் அமுலாகும் வகையில் உயர் பதவிகளுக்காக தரம் உயர்த்தப்பட்டுள்ளனர். (அ)

# ஐக்கிய மக்கள் சக்தி தேசிய பட்டியல் இறுதித் தீர்மானம் இதுவரை இல்லை!

**கூறுகிறார் திஸ்ஸ அத்தநாயக்க**

கொழும்பு, டிசெ.10

தேசிய பட்டியல் குறித்து பேச்சு வார்த்தைகள் இடம் பெறுவதாகவும், இதுவரை இறுதி தீர்மானம் ஏதும் எடுக்கப்படவில்லை எனவும், ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைப்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஐக்கிய மக்கள் சக்தி பொதுத்தேர்தலில் பெற்றுக் கொண்ட மொத்த வாக்கு வீதத்துக்கு அமைய ஐந்து தேசிய பட்டியல் ஆசனங்கள் கிடைக்கப்பெற்றன. ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் பெயர் மாத்திரம் குறிப்பிடப்பட்டது.

மிகுதி தேசிய பட்டியல் ஆசனங்களை யாருக்கு வழங்குவது என்பது குறித்து தொடர்ச்சியாக பேச்சு இடம்பெறுகிறது.

கிடைக்கப் பெற்ற தேசியப் பட்டியல் ஆசனங்களுக்கு இதுவரையில் பெயர் குறிப்பிடாமல் இருப்பது குறித்து பல்வேறு மாறுப்பட்ட கருத்துக்களும் விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன. ஐக்கிய மக்கள் சக்தியின் பக்கம் பல பிரச்னைகள் காணப்படுகின்றன.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் பல அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. கூட்டணி என்ற அடிப்படையில் பல இணக்கப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. தேசிய பட்டியலுக்குள் உள்வாங்கப் படவேண்டிய முக்கியமான நபர்களும் உள்ளனர்.

அத்துடன் மேலும் சிலர் தேசியப் பட்டியலுக்காக கோரிக்கை விடுத்துள்ளனர். ஆகவே இவ்விடயங்கள் அனைத்தையும் ஆராய வேண்டும்.

இவ்வாறான பின்னணியில் தேசியப் பட்டியல் விவகாரத்தில் உறுதியான தீர்மானம் எடுப்பது கடினமாக உள்ளது.

தேசியப் பட்டியல் குறித்து இதுவரை இறுதித் தீர்மானம் ஏதும் எடுக்கப்படவில்லை. தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம். ஆகவே வெகுவிரைவில் உறுதியான தீர்மானத்தை எடுக்கவேண்டும். தாமதப்படுத்தாமல் தீர்மானம் எடுக்கவேண்டும் என்பதையே வலியுறுத்துகிறேன். இல்லையேல் மக்கள் விமர்சிப்பார்கள்-என்றார். (அ)

# ஒவ்வொரு மாதமும் முதல் திங்கள் பொதுமக்கள் தொடர்பாடல் தினம்

**விவசாய அமைச்சு அறிவிப்பு**

கொழும்பு, டிசெ. 10

விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் வளாகத்தில், ஒவ்வொரு மாதமும் முதலாவது திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 4 மணி வரை பொதுமக்கள் தொடர்பாடல் தினம் நடத்தப்படவுள்ளது.

அதற்கமைய, விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டீ.லால்காந்த, விவசாயம், கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர் நாமல் சுருணாரத்ன, காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க மற்றும் விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் டீ.பீ.விக்கிரமசிங்க உள்ளிட்ட விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச் சுக்குரிய அனைத்து நிறுவ னங்கள், திணைக்க ளங்களின் தலைவர்களின் பங்கேற்புடன் குறித்த பொது மக்கள் தொடர் பாடல் தினம் நடத்தப்படவுள்ளது என அமைச்சு அறிவித்துள் ளது. (அ)

# கம்பஹாவில் துப்பாக்கிச்சூடு!

கொழும்பு, டிசெ. 10

கம்பஹா - கவுடன்கஹ பகுதியில் நேற்று முன் தினம் இரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில், மாகோவிட்ட பகுதியைச் சேர்ந்த 39 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மிரிஸ்ஸ கடலில் மூழ்கி உயிருக்கு போராடிய ரஷ்ய தம்பதியர் மீட்பு!

கொழும்பு, டிசெ. 10

மாத்தறை, கொடவில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மிரிஸ்ஸ கடலில் மூழ்கி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த ரஷ்ய தம்பதி ஒன்று மாத்தறை பொலிஸ் உயிர் காப்புப் பிரிவினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

ரஷ்யா நாட்டைச் சேர்ந்த 40 வயதுடைய கணவனும் 38 வயதுடைய மனைவியுமே காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இந்த ரஷ்ய தம்பதி நேற்று முன் தினம் மாலை மிரிஸ்ஸ கடலில் நீராடிக் கொண்டிருந்துள்ள நிலையில் திடீரென நீரில் மூழ்கியுள்ளனர்.

இதன்போது அங்கு இருந்த மாத்தறை பொலிஸ் உயிர்காப்பு பிரிவினர் ரஷ்ய தம்பதியைக் காப்பாற்றி கரைக்கு கொண்டு சென்று அவர்களுக்கு முதலுதவி அளித்துள்ளனர்.

# கடற்றொழில் அமைச்சுக்கு புதிய செயலாளர் நியமனம்

கொழும்பு, டிசெ. 10

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் புதிய செயலாளராக சட்டத்தரணி எம். ஏ. எல். எஸ். மந்திரிநாயக்க நியமிக்கப் பட்டுள்ளார்.



இது தொடர்பான நியமனக் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, சட்டத்த ரணி எம். ஏ. எல். எஸ். மந்திரி நாயக்கவுக்கு நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து கையளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரத்துக்கு 7 லட்சம் தேங்காய் சதொச ஊடாக நுகர்வோருக்கு!

**சதொச தலைவர் சமித்த**

கொழும்பு, டிசெ. 10

**லங்கா சதொச ஊடாக நுகர்வோருக்கு தேங்காய் விற்பனை செய்வதற்காக வாரத்திற்கு ஆறு முதல் ஏழு இலட்சம் தேங்காய்கள் விநியோகிக்கப்படுவதாக சதொச தலைவர் சமித்த பெரேரா தெரிவித்துள்ளார்.**

கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளுக்கு விநியோகிப்ப தற்காக நான்கு அரச தோட் டங்களைச் சேர்ந்த கிளைச் சங் கங்களில் இருந்து தேங்காய் ஒன்று தலா 110 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

தென்னந்தோப்பு உரிமை யாளர்கள் மற்றும் அவர்களது கிளைச் சங்கங்களில் இருந்து தேங்காய்கள் சேகரிக்கப்படு வதாக தலைவர் மேலும் சுட் டிக்காட்டினார்.

உள்நாட்டு நுகர்வு மற்றும் ஏற்றுமதிக்காக எதிர்பார்க்கப் படும் வருடாந்த தேங்காய் அறு வடை மூன்று பில்லியனாக உள்ளதுடன் இந்த வரு டம் தேங்காய் அறுவடை சுமார் 30 வீதத்தால் குறைந் துள்ளது.

தென்னை உற்பத்தி குறை வதற்கான முக்கிய காரணங்கள் விலங்குகள் சேதம், காலநிலை மாற்றம், பூச்சி சேதம் மற்றும் உரங்களின் பயன்பாடு குறைவு ஆகியவை என தெரிவிக்கப்பட் டுள்ளது. (அ)

# பல உணவகங்களில் தேங்காய் சம்பல், பால் சொதி கிடையாது!

கொழும்பு, டிசெ. 10

சந்தையில் தேங்காய்களின் விலை அதிகரிக்கப்பட்டதன் காரணமாக பெரும்பாலான உணவகங்களில் தேங்காய் சம்பல், பால் சொதி வழங் குவது நிறுத்தப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண் டிச்சாலை உரிமையாளர் சங் கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷன் தெரிவித்தார்.

தற்போது சந்தையில் தேங் காய் ஒன்றின் விலை 200 ரூபா வரை அதிகரித்து காணப் படுகிறது.

இதேவேளை அரிசி, முட்டை, உப்பு, தேங்காய் ஆகிய பொருட்களின் விலை கள் 30 வீதத்தால் அதிகரிக் கக்கூடும்.

ஒரு கிலோ கோழி இறைச் சியின் விலை 1200 ரூபாவிலி ருந்து 1280 ரூபாவாக உயர்ந் துள்ளது.

எனவே, தேங்காய்களின் விலை உயர்ந்துள்ள இந்த காலகட்டத்தில் இடியப்பம் தயாரித்தல், மதிய உணவுகளை தயாரித்து விற்பனை செய்யும் பணிகள் முற்றாக பாதிக்கப் பட்டுள்ளதாக ஹர்ஷன ருக்ஷன் மேலும் தெரிவித்தார்.

# தீவிரமாக பரவும் ஒரு வகை நோய்!

**தெங்கு செய்கை பாதிப்பு**

கொழும்பு, டிசெ. 10

புத்தளம் மாவட்டத்தில் தீவிரமாகப் பரவிச் செல்லும் ஒருவகையான நோய் காரண மாகத் தெங்கு செய்கை பாதிக் கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக தெங்கு செய்கையாளர்கள் பாரிய இன் னல்களுக்கு முகங்கொடுத்துள் ளனர்.

வெள்ளை ஈ, சிவப்பு மற் றும் கருப்பு வண்டுகள் கார ணமாக தமது செய்கை பாதித் துள்ளதாகத் தெங்கு செய்கை யாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சந்தையில் தேங்காய் விலை நாளாந்தம் அதிகரித்துச் செல் கின்ற நிலையில், இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதன்படி, புத்தளம் மாவட் டத்தில் 5000 ஏக்கர் தெங்கு செய்கை அழிவடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் அதிகா ரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெங்கு செய்கையாளர்கள் கோரி யுள்ளனர். (அ)

# அரிசி ஆலைகளில் சோதனை ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 10

பொலனறுவை மற்றும் ஹம்பாந்தோட்டையிலுள்ள அரிசி ஆலைகளில் நேற்று முன் தினம் முதல் சோதனை நடவ டிக்கைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

அரிசி ஆலைகளிலிருந்து நாளாந்தம் விநியோகிக்கப்படும் அரிசி தொகை தொடர்பில் அறிக்கையை பெற்றுக் கொள் ளுமாறு ஜனாதிபதியால் வழங் கப்பட்ட பணிப்புரைக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய நேற்று முன் தினம் முதல் 10 நாட்களுக்கு தொடர்ச்சியாக அரிசி ஆலை வில் சோதனைகள் நடத்தப் படவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரி வித்துள்ளது.

பொலனறுவை மாவட்டத் திலுள்ள பிரதான 8 அரிசி ஆலை களில் சோதனை நடவ டிக்கை கள் ஆரம்பிக்கப்பட்டன.

அதனடிப்படையில், அர லிய, நியூரத்ன, நிபுன, லக் சஹல், மேனக, ஹிரு, ஜயவிக் ரம மற்றும் வீஹேன ஆகிய அரிசி ஆலைகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக நுகர் வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

அம்பாந்தோட்டை மாவட் டத்திலுள்ள இரேஷா, லயனல், நவோத்யா, சனுஜா ஆகிய 5 அரிசி ஆலைகள் சோதனைக் குட்ப டுத்தப்பட்டதாக நுகர் வோர் விவகாரஅதிகார சபை தெரிவித்தது.

நெல் கொள்வனவு நாளாந்த உற்பத்தி மற்றும் அரிசி தொகை விநியோகம் உள்ளிட்டவை தொடர்பில் தரவுகளை பெற் றுக்கொள்ளும் நடவடிக்கை இதன்போது முன்னெடுக்கப் படுவதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை மேலும் தெரிவித் துள்ளது.

ஒரு கிலோகிராம் நாட்ட ரிசியை 225 ரூபா மொத்த விலையில் 230 ரூபா சில்லறை விலையிலும் விற்பனை செய்வ தற்கு ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது அரிசி ஆலை உரிமையாளர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

நாட்டரிசியை 225 ரூபா மொத்த விலைக்கும் 230 ரூபா சில்லறை விலையிலும் விநியோ கிக்குமாறு ஜனாதிபதி இதன் போது அறிவுறுத்தியிருந்தார்.

எனினும் சந்தையில் அரிசி யின் விலை அதிகரித்துள்ளமை யால் அரிசி விற்பனை செய்யா துள்ளதாக சில வர்த்தகர்கள் கூறினர். (அ)

# அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு இணங்காவிடில் கடும் நடவடிக்கை

**அரிசி வர்த்தகர்களுக்கு ஜனாதிபதி அநுர எச்சரிகை**

கொழும்பு, டிசெ. 10

நாட்டில் நிலவும் அரிசி தட் டுப்பாட்டை உடனடியாக நிவர்த்திக்க நடவடிக்கை எடுக் குமாறு ஜனாதிபதி அனுரகு மார திஸாநாயக்க அரிசி வர்த்த கர்களுக்கு ஆலோசனை வழங் கியுள்ளார்.

சந்தையில் அதிகரித்துள்ள அரிசி தட்டுப்பாட்டுக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற விசேட சந்திப்பில் அவர் இந்த ஆலோசனையை வழங்கியுள் ளார்.

அரசாங்கத்தின் தீர்மானத் துக்கு இணங்க முடியாவிடின், அதற்கு எதிராக கடும் நடவ டிக்கை எடுக்க நேரிடும் என்றும் ஜனாதிபதி எச்சரித்துள்ளார்.

சந்தையில் நிலவும் அரிசி தட்டுப்பாட்டுக்குத் தீர்வு காண் பதற்காக ஜனாதிபதி அனுரகு மார திஸாநாயக்க 2 தடவைகள் அரிசி ஆலை உரிமையாளர்க ளைச் சந்தித்துக் கலந்துரையா டியிருந்தார்.

எனினும், சந்தையில் அரிசி தட்டுப்பாடு மற்றும் நிர்ணய விலையைவிட அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யப்படு கின்ற நிலையில் ஜனாதிபதி மீண்டும் ஒருமுறை அரிசி வர்த் தகர்களைச் சந்தித்து விசேட கலந்துரையாடலை நடத் தியுள் ளார். (அ)

# கால்நடை வைத்தியர்களால் சான்றளிக்கப்பட்ட பன்றி இறைச்சியை மாத்திரம் வாங்கவேண்டும்

கொழும்பு, டிசெ. 10

தற்போது சந்தையில் ஆரோக்கியமான விலங்குகளின் பன்றியிறைச்சி விற்பனை செய் யப்படுவதாகக் கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கத் தின் தலைவர் கால்நடை வைத் தியசர் சிசிர பியசிறி தெரிவித் துள்ளார்.

ஆபிரிக்கப் பன்றிக் காய்ச்சல் காரணமாகக் கடந்த கடந்த காலங்களில் பன்றியிறைச்சி விற்பனை மட்டுப்படுத்தப்பட் டிருந்தது.

இதன் காரணமாக நாட்டின் பல பகுதிகளில் உள்ள கால் நடை பண்ணைகளின் உரிமை யாளர் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

இந்த நிலையில், குறித்த ஆபிரிக்கப் பன்றிக் காய்ச்சல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதற்மைய, கால்நடை வைத்தியர்களால் சான்றளிக் கப்பட்ட இறைச்சியை மாத் திரம் கொள்வனவு செய்யுமாறு கால்நடை வைத்திய அதிகா ரிகள் சங்கத்தின் தலைவர் கால்நடை வைத்தியசர் சிசிர பியசிறி தெரிவித்தார். (அ)

# வைத்திய அதிகாரி ஒருவரின் அலுவலகத்தில் துப்பாக்கி மீட்பு

கொழும்பு, டிசெ. 10

வெல்லம்பிட்டிய - மீதொட்டமுல்ல வைத்திய அதிகாரியின் அலுவலக கட்ட டத்திற்கு பின்புறம் உள்ள கொள்கலன் பெட்டியின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கி மற்றும் இரண்டு மெகசீன்கள் மீட்கப் பட்டுள்ளன.

மீட்கப்பட்ட கைத்துப் பாக்கி பிரேசிலில் தயாரிக் கப்பட்டதாக, பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கடவுச்சீட்டு விநியோகிக்கும் ஒருநாள் சேவை பணிக்குழாமினர் மேலதிக நேரச் சேவையில்!

கொழும்பு, டிசெ. 10

கடவுச்சீட்டை விநியோ கிக்கும் ஒருநாள் சேவை பணிக் குழாமினர் மேலதிக நேரச் சேவையில் ஈடுபட்டு வருகின் றனர்.

இதன்படி, அந்த பணியா ளர்கள் வார நாட்களில் இரவு 10 மணி வரை சேவையில் ஈடு படுவதாகத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

இலங்கையில் கடவுச்சீட்டு பணிகளைத் துரிதமாக முன் னெடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. இதன்மூலம் அவசர தேவைப்பாடுகளுக்காகக் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ள உள்ளவர்கள் நன் மையடையவுள்ளனர்.

இணையவழி மூலம் கடவுச் சீட்டைப் பெற்றுக் கொள்வ தற்கான தினத்தை ஒதுக்கிக் கொள்வதற்காக நாளாந்தம் ஆயிரத்துக்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் ஆணையை புறக்கணித்து செயற்படுகிறது அனுரவின் அரசு!

**சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு**

கொழும்பு, டிசெ. 10

**தற்போதைய அரசாங்கம் மக்கள் ஆணையை புறக்கணித்து, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த இணக்கப்பாட்டையே முன்னெடுத்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தலைமையில் நீர்கொழும்பு பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பெரும் மக்கள் ஆணையையும், கூடிய ஆசனங்களையும் பெற்ற தற்போதைய அரசாங்கம், மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மறந்து விட்டு, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தினால் முன்னெடுத்து வரப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளையே தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது. இது கடும் துரோக செயலாகும். மக்களை ஏமாற்றும் செயலாகும்.

நமது நாடு இருதரப்பு மற்றும் சர்வதேச பிணைமுறி பத்திரதாரர்களுடன் கடன் மறுசீரமைப்பு திட்டத்தை ஆரம்பித்த போது இந்த கடன் மறுசீரமைப்பு மூலம் நாட்டுக்கு எந்த நன்மையும் ஏற்படாது என்று ஐக்கிய மக்கள் சக்தியும் மக்கள் விடுதலை முன்னணியும் கூறியுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்பிற்குள் இருந்து கொண்டு நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் புதிய சர்வதேச நாணய நிதிய இணக்கப்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி பல விடயங்களை பரிந்துரைத்தது.

மக்களின் அழுத்தம் மற்றும் கடன்சுமை அதிகரித்துள்ளன. மற்றும் சமூகத்தின் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரான குழந்தைகள், தாய்மார்கள் மற்றும் இளைஞர்கள் பெரும் பாரபட்சமான விளைவைக் எதிர் கொண்டுள்ளனர்.

இந்த இணக்கப்பாட்டின் மூலம், இறுதியில் செலுத்த வேண்டிய கடனைக் குறைப்பதற்குப் பதிலாக, மேலதிகமாக 2.3 பில்லியன் டொலர் கடனையும் சேர்த்து செலுத்த வேண்டியுள்ளது. எமது நாட்டின் கடன் சுமை அதிகரிக்கும் போது சுகாதாரம், கல்வி, விவசாயம், மீன்பிடி போன்ற துறைகளில் பல பிரச்னைகள் ஏற்படும். இது தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்-என்றார். (அ)

# போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் சிக்கினார்

கொழும்பு, டிசெ. 10

அநுராதபுரம், மதவாச்சி பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

அநுராதபுரம், மதவாச்சி பிரதேசத்தில் வசிக்கும் 25 வயதுடைய இளைஞர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து 100 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து,சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக மதவாச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# சட்டவிரோதமாக இணைத்த லொறி ஒன்று கண்டுபிடிப்பு!

கொழும்பு, டிசெ. 10

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு சொந்தமான சட்டவிரோதமாக உதிரிப்பாகங்களை நாட்டுக்கு வரவழைத்து இணைக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இசுசு ரக வகையிலான லொறியொன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஹப்புத்தளை முதுவானவத்த பிரதேசத்தில் வைத்து வலான மத்திய ஊழல் ஒழிப்பு பிரிவினர் மூலம் குறித்த வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்து ஆணையாளரின் எந்தவித அனுமதியுமின்றி இந்த வாகனம் சட்டவிரோதமாக இணைக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படுகின்றது.

தற்போது இந்த வாகனம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மீளப் பெறப்பட்டது லொஹானின் மனு!

கொழும்பு, டிசெ. 10

மிரிஹானவில் உள்ள வீடொன்றில் சட்டவிரோதமாக பாகங்கள் பொருத்தி தயாரிக்கப்பட்ட வாகனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் தன்னைக் கைது செய்வது சட்டவிரோதமானது என உத்தரவிடக் கோரி, முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவினால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு நேற்று மீளப்பெறப்பட்டது.

இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

லொஹான் ரத்வத்த சார்பில் ஆஜரான ஜனாதிபதியின் சட்டத்தரணி சஞ்சய் ராஜரத்தினம், தனது கட்சிக்காரருக்கு தற்போது பிணை வழங்கப்பட்டுள்ளதாக நீதிமன்றில் தெரிவித்தார்.

இதன்படி, இந்த மனுவை மேலும் தொடர விரும்பவில்லை எனவும், அதனை மீளப் பெறுவதற்கு அனுமதிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதியின் சட்டத்தரணி நீதிமன்றில் கோரினார்.

இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, மனுவை மீளப்பெற அனுமதி வழங்கினார். (அ)

# ரணிலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை!

**சுதந்திர மக்கள் சபை கோரிக்கை**

கொழும்பு, டிசெ. 10

எந்தவொரு நியாயமான காரணமும் இன்றி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தேர்தலை ஒத்திவைத்தமையானது, கூட்டு ஊழல் மற்றும் அரசியல் கருக்கலைப்பு மற்றும் நிதி ரீதியாக செய்யப்பட்ட பொருளாதாரக் கொலை என சுதந்திர மக்கள் சபை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள், இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினர் ஆகியோருக்கு எழுதியுள்ள கடிதத்தில் சுதந்திர மக்கள் சபையின் தலைவர் டலஸ் அழகப்பெரும இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த கடிதமானது, ஜனநாயகத்தை கருக்கலைப்பு செய்தமைக்கு விலை கொடுங்கள் மற்றும் ரணில் விக்கிரமசிங்கவின் ஊழல் குற்றச்சாட்டு என்ற தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளதுடன் அதில் பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அத்தோடு, தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் இந்த பொருளாதாரக் கொலையாளிகளுக்கு எதிராக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்போகிறது என்பதை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ரணில் விக்கிரமசிங்க வீணடித்த மக்களின் வரிப் பணத்தை மக்களிடம் மீள வழங்குவதன் மூலம் அரசியல் வரலாற்றில் நாகரீகமான, அறம் சார்ந்த அத்தியாயத்தை சேர்ப்பதற்கு போதிய அவகாசம் எஞ்சியிருப்பதாகவும் அந்த கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# மின்கட்டண திருத்தம் குறித்த மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் இந்த வாரம்!

கொழும்பு, டிசெ. 10

மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பாக இலங்கை மின் சார சபை, பொதுப் பயன்பா டுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்த பிரேரணை மீதான மக்கள் கருத்துக் கேட்பு கூட் டம் இந்த வாரம் இடம்பெறும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் கூட்டுத் தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜயநாத் ஹேரத் தெரிவித்தார்.

உத்தேச பிரேரணை தற்போது பொது பயன்பாட்டு ஆணைக்குழுவினால் ஆய்வு செய்யப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த ஆண்டு முதல் ஆறு மாதங்கள் வரை தற்போதைய மின் கட்டணத்தை திருத்த வேண்டாம் என மின்சார வாரியம் ஆணையத்திடம் முன்மொழிந்துள்ளது.

இந்த முன்மொழிவை ஆய்வு செய்த பின், ஆணைக்குழுவின் முடிவு அறிவிக்கப்பட உள்ளது.

ஆறு மாதங்களுக்குள் 2330 மில்லியன் ரூபா இலாபம் ஈட்டுவதாக சபை மதிப்பிடுவதாகவும், அந்த இலாபத்தின் அடிப்படையில் எதிர்கால விலையை திருத்திக் கொள்ள முடியும் எனவும், மின்சார சபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் முன்வைத்த பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அநுரவுடனான சந்திப்பின் பின்னர் டட்லி சிறிசேன வெளிநாடு பயணம்

கொழும்பு, டிசெ. 10

பிரபல அரிசி வர்த்தகரான டட்லி சிறிசேன வெளிநாடு சென்றுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

நாட்டில் தற்போது உருவாகியுள்ள அரிசி தட்டுப்பாடு தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு அதற்கு மறுதினமே டட்லி சிறிசேன தனிப்பட்ட பயணமொன்றை மேற்கொண்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், நுகர்வோர் அதிகாரசபையின் அதிகாரிகள் அரலிய உள்ளிட்ட அரிசி ஆலைகளை கண்காணிக்க ஆரம்பித்துள்ளனர்.

அதன்படி, நுகர்வோர் அதிகார சபையின் இரு அதிகாரிகள் எனும் ரீதியில் அரிசி ஆலைகளில் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் புதிய கட்டுப்பாட்டு விலையில் அரிசியை வழங்குவதற்கு அனைத்து ஆலை உரிமையாளர்களும் இணக்கம் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# யானை தாக்கி வயோதிபர் பலி!

கொழும்பு, டிசெ. 10

பொலனறுவை - கிரித்தலை பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மின்னேரியா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்றது.69 வயதுடைய நபர் வயோ திபர் ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வயோதிபர் தோட்டத்துக்குள் புகுந்த காட்டு யானையை விரட்ட முற்பட்டபோது காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்பத்தி செலவைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## தேசிய கமக்காரர் அதிகார சபை அநுர அரசாங்கத்திடம் கோரிக்கை

மட்டக்களப்பு, டிசெ. 10

“விவசாயிகளின் உற்பத்தி செலவைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை அநுர அர சாங்கம் முன்னெடுக்க வேண் டும். அத்தோடு, பதுக்கிவைக்கப்பட்டுள்ள நெல்லை வெளி யில் கொண்டுவருவதன் மூலம் தற்போது ஏற்பட்டுள்ள அரிசித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய முடியும்”- இவ்வாறு தேசிய கமக்காரர் அதிகார சபையின் தலைவர் திலக்பண்டார தெரிவித்தார்.



தேசிய கமக்கார அதிகார சபையின் ஊடக சந்திப்பு மட்டக்களப்பிலுள்ள கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் திலக் பண்டார மேலும் தெரிவிக்கையில்,

“விவசாயிகளாகிய எங்களுடன் ஆலோசிக்காமல் எங்களுக்குத் தெரியாமல் அரசினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பில் நாங்கள் கவலை தெரிவிக்கின்றோம்.

மட்டக்களப்பில் 2 இலட்சம் ஏக்கர் விதைத்திருந்தாலும் அதில் ஓர் இலட்சத்து 20 ஆயிரம் ஏக்கருக்கு மேல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இன்னமும் மட்டக்களப்பில் வெள்ள நீர் வயல்களில் இருந்து வடிந்தோடவில்லை. இதுவரை பழமையான சுற்றுநிருபத்தை வைத்தே நஷ்டஈடுகளை வழங்க தீர்மானித்துள்ளமை கவலையளிக்கின்றது.

விவசாயிகள் பசளை உள்ளிட்ட பல விடயங்களுக்கு அதிக பணத்தை செலவழித்தாலும் இவர்களுக்கு வழங்கும் நஷ்டஈடு போதுமானதாக இல்லை என நாம் அரசுக்கு அறியத்தருகின்றோம்.

ஏக்கருக்கு 8 ஆயிரம் போதுமானதாக இல்லை. சில இடங்களில் வயல்களில் மண் மூடியிருக்கின்றது.

வெள்ள நீர் வடியவில்லை, அதை நாம் நேரடியாக காண்கின்றோம். விவசாயிகளுக்கு எதிராக செயல்பட நினைக்க வேண்டாம் என அரசைக் கேட்டுக்கொள்கின்றோம்.

டட்லி முதலாளி போன்றோர்களை வைத்து விலை தொடர்பில் கதைத்தார் கள். ஜனாதிபதி பல கருத்துக் களை சொன்னாலும், பதுக்கி வைக்கப்பட்டுள்ள நெல்லை வெளியில் கொண்டு வரமுடியும்.

அறுவடை காலங்களில் நெல் குறைந்த விலையிலேயே கொள்வனவு செய்யப்படுகிறது.

நெல் உற்பத்தி விலையை குறைப்பதற்கான ஏற்பாட்டினை அரசு மேற்கொள்ள வேண்டும்”- என்றார்.

இதன்போது தேசிய கமக்கார அதிகார சபையின் தலைவர், பொருளாளர், உப செயலாளர் உள்ளிட்ட தேசிய அதிகார சபையின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களும், மட்டக்களப்பு மாவட்ட தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்களும் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தனர். (எ)

# சாரணியத்துறையில் விருது





கல்முனை, டிசெ. 10

நீண்டகாலம் சாரணியத்தில் சேவையாற்றிய சிரேஷ்ட ஊடகவியலாளரும், உதவி மாவட்ட சாரண ஆணையாளருமான எம்.எப். றிபாஸ் தேசிய சாரணர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் அலரி மாளிகையில் பிரதம சாரண ஆணையாளர், சட்டத்தரணி ஜனப்ரித் பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் பிரதமரின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டு விருது வழங்கி கௌரவித்தனர்.

# ஜீப் மோதி பாதசாரி படுகாயம் பொலிஸ் பொறுப்பதிகாரி கைது

மட்டக்களப்பு, டிசெ. 10

மட்டக்களப்பு, செங்கலடி கரடியனாறு பகுதியில் ஜீப் மோதியதில் பாதசாரி ஒருவர் படுகாயமடைந்ததோடு, ஜீப் சாரதியான கரடியனாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்துக்குள்ளான பாதசாரி படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா மருத்துவமனை அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், கைதான பொலிஸ் பொறுப்பதிகாரியை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் கரடியனாறு போக்குவரத்து பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# வெள்ளப் பாதிப்பு குறித்து அரச அதிபர் நேரில் ஆய்வு

கல்முனை, டிசெ. 10

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தடயந்தலாவ பிரதேச வேளாண்மை செய்கையை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம நேரில் சென்று பார்வையிட்டார்.

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட பெரும் வெள்ள நிலைமையால், தடயந்தலாவ நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் சுமார் 2800 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்டிருந்த பயிர்கள் பாதிக்கப்பட்டன.

வெள்ளப் பெருக்கு காரணமாக வீதிகள் மற்றும் வயல் நிலங்களும் கடுமையான சேதங்களுக்குள்ளாகின. இந்த நிலைமைகளை நேரில் சென்று பார்வையிட்ட மாவட்ட அரசாங்க அதிபர், மத்திய மற்றும் மாகாண நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளிடம் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு விவசாயிகளின் பிரச்னைக்கு துரித தீர்வை பெற்றுக் கொடுக்குமாறு கோரிக்கை விடுத்தார் .

# கிழக்கு மாகாண இலக்கிய விழா புதனன்று திருகோணமலையில்

திருகோணமலை, டிசெ. 10

தவிர்க்க முடியாத காரணங்களால் இரு தடவைகள் ஒத்திவைக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான இலக்கிய விழா நாளை 11 ஆம் திகதி புதன்கிழமை திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கடந்த மூன்று வருடங்களாக விருது பெறத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்கள் அனைவரும் இங்கு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண ஆளுநர், பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மேற்படி விழா தொடர்பாக முன்னைய திகதியும் இடமும் மட்டுமே மாற்றமடைந்துள்ளன. ஏனைய நிகழ்வுகள் யாவும் முன்னர் திட்டமிடப்பட்டது போன்று நடைபெறும் என்று கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தெரிவித்தார்.

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வரும் கலைஞர்களுக்கு விசேட போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது.(எ)

# அனர்த்த தடுப்பு செயல்பாடும் துறைசார்ந்தோர் கௌரவிப்பும்



கல்முனை, டிசெ. 10

அபிவிருத்தி சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட அனர்த்தத் தடுப்பும் அதிலிருந்து மீண்டெழும் நடைமுறைகளும் எனும் தொனிப் பொருளிலான நிகழ்வு அட்டாளைச்சேனை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளரும், கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவருமான எம். ஏ. சி. எம். றியாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் போது திருகோணமலை மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி அல்ஹாபிழ் என். எம். அப்துல்லாஹ், கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம். எஸ். சம்சுதீன் ஆகியோர் முன்னிலை விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் போது அனர்த்தத் தடுப்பு விழிப்புணர்வு தொடர்பான விசேட கருத்துரைகள் வழங்கப்பட்டதுடன், அனர்த்த காலங்களில் சமூக நோக்கோடு செயல்பட்டு தன்னை அர்ப்பணித்து சேவையாற்றியவர்கள் பலர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். அத்தோடு அட்டாளைச்சேனை ஐந்தாம் பிரிவுக்கான அனர்த்த முகாமைத்துவக் குழு அங்கத்தவர்களுக்கான அடையாள அட்டை மற்றும் நியமனக் கடிதங்களும் வழங்கப்பட்டன.

இதேவேளை, கடந்த முறை நடைபெற்ற உயர் தரப் பரீட்சையில் சித்தி பெற்று மருத்துவ பீடத்துக்குத் தெரிவான அட்டாளைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த எட்டு மாணவர்கள் இதன் போது நினைவுச் சின்னம் வழங்கிப் பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன், கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அலுவலகமும் திறந்து வைக்கப்பட்டது. (எ)

# இளைஞர் கழக உறுப்பினர்கள் மட்டக்களப்பில் சிரமதானம்

மட்டக்களப்பு, டிசெ. 10

மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் கழக சம்மேளனம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் இணைந்து, “பொலித்தீன் அற்ற எமது நகரம், எமது சூழலை நாம் பாதுகாப்போம்” எனும் கருப்பொருளுக்கு அமைவாக சிரமதானப் பணியொன்றை மட்டக்களப்பு நகரில் முன்னெடுத்தது.

மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் ஜீ. சஜீவ் தலைமையில் மட்டக்களப்பு வாவிக்கரை பூங்காவில் ஆரம்பித்து மட்டக்களப்பு புதுப்பால சந்தி முதல் கொத்துக்குளத்து மாரியம்மன் ஆலயம் வரையான பகுதிகளில் காணப்பட்ட பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பொருட்கள் இதன்போது அகற்றப்பட்டன. (எ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவில் தஞ்சமடைந்தார் சிரியா ஜனாதிபதி ஆசாத்

## மனிதாபிமான அடிப்படையில் ஆதரவு வழங்கியதாக ரஷ்ய தரப்பு தெரிவிப்பு

மொஸ்கோ, டிசெ. 10

மத்திய கிழக்கு நாடான சிரியாவை எச். டி. எஸ். கிளர்ச்சிப் படை கைப்பற்றியதைத் தொடர்ந்து ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் ரஷ்யாவில் தஞ்சமடைந்துள்ளார். அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் மனிதாபிமான அடிப்படையில் ஆதரவளித்துள்ளதாக ரஷ்ய தரப்பு தெரிவித்துள்ளது.



ரஷ்ய ஜனாதிபதி புடினின் வசிப்பிடமான க்ரெம்ளின் மாளிகை வட்டாரத் தகவலை சுட்டிக்காட்டி இத்தகவலை ரஷ்யாவின் இன்டர்பேக்ஸ், டாஸ், ரியா நோவோஸ்டி பத்திரிகைகள் உறுதிப்படுத்தி செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கிடையில் சிரியா விவகாரம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கருத்து வெளியிட்டுள்ளார்.

"ஜனாதிபதி ஆசாத்தின் வீழ்ச்சி நீதியின் வெற்றி. இது பல ஆண்டுகளாக துன்பப்பட்டுவரும் சிரிய மக்களுக்குக் கிடைத்துள்ள ஒரு வரலாற்று வாய்ப்பு. இந்த வாய்ப்பு அவர்கள் தங்கள் தேசத்தை வளமான எதிர்காலத்துக்காக கட்டமைக்க உதவும். அவர்கள் தங்கள் நாட்டை பெருமைமிகு அடையாளமாக மாற்ற உதவும்"என்று பைடன் வரவேற்றுள்ளார்.

மத்திய கிழக்கு நாடான சிரியாவில் கடந்த 1971இல் இராணுவ தளபதியாக இருந்த ஹபீஸ் அல் ஆசாத் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றினார். 29 ஆண்டுகள் சிரியா ஜனாதிபதியாக இருந்த அவர் 2000ஆம் ஆண்டில் காலமானார். அவரது மகன் பஷார் அல் ஆசாத் கடந்த 2000 ஆம் ஆண்டு ஜூலை 17ஆம் திகதி ஜனாதிபதியானார். அவர் ஷியா பிரிவை சேர்ந்தவர் என்பதால், அவருக்கு எதிராக சன்னி முஸ்லிம்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி ஆசாத்துக்கு ஈரான், ரஷ்யா ஆதரவு வழங்கின. கிளர்ச்சி படைகளுக்கு துருக்கி, அமெரிக்கா ஆதரவு வழங்கின. கடந்த 2014இல் சன்னி பிரிவைச் சேர்ந்த ஐ. எஸ். ஐ. எஸ். தீவிரவாத குழு சிரியாவின் பெரும் பகுதியை கைப்பற்றியது. ஜனாதிபதி ஆசாத் படைகள் கிளர்ச்சிப் படைகள் இடையிலான போர் பல ஆண்டுகள் நீடித்தது. இதில் சுமார் 3 இலட்சம் பேர் உயிரிழந்தனர்.

பின்னர் ரஷ்யா, ஈரானின் ஆதரவால் ஜனாதிபதி ஆசாத்தின் கை ஓங்கி, ஐ. எஸ். ஐ. எஸ். தீவிரவாத அமைப்பின் பிடியில் இருந்த பகுதிகள் மீட்கப்பட்டன. இந்தச் சூழலில் ரஷ்யா - உக்ரைன் போரை தொடர்ந்து, சிரியா ஜனாதிபதி ஆசாத்தின் இராணுவத்துக்கு ரஷ்யா, ஈரானின் ஆதரவு படிப்படியாக குறைந்தது.

கடந்த முதலாம் திகதி சிரியாவின் அலெப்போ நகரை கிளர்ச்சிப் படை கைப்பற்றியது. அடுத்தடுத்து பல்வேறு நகரங்களை கைப்பற்றிய எச். டி. எஸ். படையினர் சிரியா தலைநகர் டமாஸ்கஸ்ஸையும் கைப்பற்றினர்.

சிரியாவில் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்த போது, மனைவி, பிள்ளைகள் ரஷ்யாவுக்கு தப்பிச் சென்ற நிலையில், தற்போது ஜனாதிபதி ஆசாத்துக்கு மனிதாபிமான அடிப்படையில் ரஷ்யா ஆதரவு வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளது. (எ)

# ரஷ்யாவுக்கு எதிரான போரில் 43,000 உக்ரைன் படையினர் பலி

## ஜனாதிபதி ஜெலன்ஸ்கி உருக்கம்

கீவ், டிசெ. 10

ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனின் 43 ஆயிரம் படையினர் பலியாகினர் என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போரானது கடந்த 2022ஆம் ஆண்டு பெப்ரவரியில் தொடங்கியது.

இரு நாடுகளும் போரை தீவிரப்படுத்தியுள்ளன. போரை முடிவுக்கு கொண்டு வரும் தூதரக மற்றும் அமைதி பேச்சுகள் பலன் எதனையும் தரவில்லை.

உக்ரைனுக்கு அமெரிக்கா, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள் ஆதரவளித்து வருகின்றன. அந்த நாடுகள் நிதி, இராணுவ உதவியை வழங்கி வருகின்றன.

இந்த நிலையில், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி பிரான்ஸ் நாட்டுக்கு சென்று ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனை நேரில் சந்தித்து பேசினார். அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ட்ரம்பும் பிரான்ஸ் சென்றுள்ளார்.

ஜெலன்ஸ்கி செய்தியாளர்களிடம் கூறும்போது, உக்ரைனுக்கு நீடித்த அமைதி வேண்டும். கடந்த காலத்தில் அழிக்கும் செயலில் ஈடுபட்டது போன்று, வருங்காலத்தில் அமைதியை குலைக்கும் நோக்கில் ரஷ்யா ஈடுபடாத வகையிலான அமைதி மக்களுக்கு வேண்டும் என்று ட்ரம்பிடம் கூறினேன்.

முடிவற்ற ஒன்றாக போர் இருக்க முடியாது. அமைதி ஒன்றே நிரந்தரம் மற்றும் நம் பத்தக்க ஒன்றாக இருக்கும் எனக் கூறிய ஜெலன்ஸ்கி, உக்ரைனின் 43 ஆயிரம் படையினர் போரில் உயிரிழந்தனர். 3 இலட்சத்து 70 ஆயிரம் பேர் காயமடைந்துள்ளனர். இலட்சக்கணக்கானோர் புலம்பெயர்ந்துள்ளனர் எனவும் கூறினார்.

எனினும், போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான பேச்சுக்கு வர உக்ரைன் தயாராக இல்லை. அவர்கள் மறுத்து வருகின்றனர் என ரஷ்யா கூறி வருகிறது. (எ)

# கொடுங்கோல் ஆட்சி சரிந்தது அமைதிக்கரம் நீட்டுகிறோம்

## இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு

டெல் அவிவ், டிசெ. 10

டமாஸ்கஸின் கொடுங்கோல் ஆட்சி சரிந்தது என்றும்

இஸ்ரேல் எல்லையை கடந்து சிரியாவில் உள்ள அனைவருக்கும் நாங்கள் அமைதிக் கரம் நீட்டுகிறோம் என பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சிரியாவில் ஆசாத்தின் இரு தசாப்த ஆட்சி முடிவுக்கு வந்துள்ளதை நெதன்யாகு வரவேற்றுள்ளார்.

இதுபற்றி எக்ஸ் சமூக ஊடகத்தில் அவர் பகிர்ந்த வீடியோ ஒன்றில், "மத்திய கிழக்கில் ஒரு வரலாற்று நாள். ஆசாத்தின் ஆட்சி, டமாஸ்கஸின் கொடுங்கோல் ஆட்சி சரிந்தது. ஒரு பெரிய வாய்ப்பு கிடைத்திருக்கிறது. ஆனால்,



பெரியளவிலான ஆபத்துகளும் உள்ளன.

எங்களுடைய எல்லையை கடந்து சிரியாவில் உள்ள அனைவருக்கும் நாங்கள் அமைதிக் கரம் நீட்டுகிறோம். ட்ரூஜ், குர்த், கிறிஸ்தவர் மற்றும் முஸ்லிம் என இஸ்ரேலில் அமைதியாக வாழ விரும்பும் அனைவருக்கும் ஆதரவுக்கரம் நீட்டுகிறோம்"- என்றார். (எ)

100 வயதில் திருமணம்

# கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்த ஜோடி

பிலடெல்பியா, டிசெ. 10

100 வயதான பெர்னி லிட்மேன் என்பவர் 102 வயதான மாஜோரி பிடர்மேன் என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். இந்தத் திருமணம் கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்தது.

அமெரிக்காவின் பிலடெல்பியா நகரைச் சேர்ந்த 100 வயதான பெர்னி லிட்மேன் என்பவர் 102 வயதான மாஜோரி பிடர்மேன் என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். இருவரும் பிலடெல்பியாவில் உள்ள ஒரு மூத்த குடிமகன்கள் வாழும் குடியிருப்பு பகுதியில் வாழ்ந்து வந்துள்ளனர். அங்கு 9 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு விருந்தில் இருவரும் சந்தித்துக் கொண்டனர்.



அப்போது அவர்களுக்குள் பழக்கம் ஏற்பட்டு காதல் மலர்ந்தது. 9 ஆண்டுகளாக காதலித்து வந்த அவர்கள் கடந்த மே மாதம் 19ஆம் திகதி திருமணம் செய்து கொண்ட னர். இவர்களின் திருமணத்தின் போது பொனியின் பின் நான்கு தலைமுறையைச் சேர்ந்த குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

தற்போது இவர்களின் திருமணம் உலகில் மிக வயதான திருமண ஜோடி என்று கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. இதை கின்னஸ் உலக சாதனை நிறுவனம் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளது. இதையடுத்து அந்த தம்பதிக்கு பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். (எ)

# சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். முகாம்களை இலக்குவைத்து அமெரிக்கா தாக்குதல்

டமாஸ்கஸ், டிசெ. 10

சிரியாவில் உள்ள ஐ. எஸ். ஐ. எஸ். தீவிரவாதிகளின் முகாம்களை இலக்கு வைத்து அமெரிக்கா வான்வழித் தாக்குதல் நடத்தியது.

மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான சிரியா கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்றுள்ளது. 24 ஆண்டுகளாக ஜனாதிபதியாக இருந்த பஷார் அல் -ஆசாத் நாட்டை விட்டு தப்பியோடியுள்ளர். அவர் ரஷ்யாவில் தஞ்சமடைந்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

"ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம்" கிளர்ச்சியாளர்கள் வசம் தற்போது சிரியா சென்றுள்ள நிலையில், சிரியா பிரதமர் முகமது காசி ஜலாலி வெளியிட்ட வீடியோ பதிவில், எதிர்க்கட்சிகளுடன் கைகோர்க்கவும், ஒரு இடைக்கால அரசை நிறுவவும் தான் தயாராக இருப்பதாக தெரிவித்தார். மேலும் அவர், கிளர்ச்சி குழுவின் தலைவர் களை தொடர்பு கொண்டதாகவும், அடக்குமுறைகள் இருக் காது என்று கிளர்ச்சியாளர்கள் உறுதியளித்ததாகவும் கூறினார்.

அமெரிக்காவின் பி 52, எப் 15 எஸ், ஏ-10 எஸ் ஆகிய போர் விமானங்கள் மத்திய சிரியாவிலுள்ள பயங்கரவாதிகளின் முகாம்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியதாக அமெரிக்க இராணுவத் தரப்பு உறுதிப்படுத்தியுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிப் போட்டியில் இந்தியாவை வீழ்த்தி ஆசியாவின் சம்பியனானது பங்களாதேஷ்




டுபாய், டிசெ. 10

ஜூனியர் ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் இந் தியாவை வீழ்த்தி பங்களாதேஷ் சம்பி யனானது.

8 அணிகள் இடையிலான 11ஆவது ஜூனியர் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி (19 வயதுக்கு உட்பட்டோர்) ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்றது. இதில் பங்கேற்ற அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதின. லீக் சுற்று முடிவில் பாகிஸ்தான், இந்தியா (ஏ பிரிவு) இலங்கை , பங்களாதேஷ் (பி பிரிவு) ஆகிய அணிகள் அரையிறுதி சுற்றுக்கு முன்னேறின.

இதையடுத்து நடந்த அரையிறுதியில் இந்திய அணி இலங்கையையும், பங்களாதேஷ் அணி பாகிஸ்தானையும் வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறின. இந்த நிலையில் இந்தியா - பங்களாதேஷ் இடையே இறுதிப்போட்டி டுபாய் மைதானத்தில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்துக்கான நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி களத்தடுப்பை தெரிவு செய்தது. இதை யடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 49. 1 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 198 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

பங்களாதேஷ் தரப்பில் அதிகபட்சமாக எம். டி. ரிசான் ஹோசான் 47 ஓட்டங்கள் எடுத்தார். இந்தியா தரப்பில் யுதாஜித் குஹா, சேத்தன் சர்மா, ஹர்திக் ராஜ் ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர். இதைய டுத்து 199 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக் குடன் இந்தியா களமிறங்கியது.

இதில் ஆயுஷ் மத்ரே ஓர் ஓட்டத்திலும், வைபவ் சூர்யவன்ஷி 9 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். தொடர்ந்து களமிறங்கிய ஆண்ட்ரே சித்தார்த் 20 ஓட்டங்களிலும், கே. பி. கார்த்திகேயா 21 ஓட்டங்களி லும், முகமது அமான் 26 ஓட்டங்களிலும், ஹர்வன்ஷ் சிங் 6 ஓட்டங்களிலும், கிரண் சோர்மலே ஓர் ஓட்டத்தி லும், ஹர்திக் ராஜ் 24 ஓட்டங்களிலும், சேத்தன் சர்மா 10 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

இறுதியில் இந்திய அணி 35. 2 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 139 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதனால் பங்களாதேஷ் அணி 59 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது. பங்களா தேஷ் தரப்பில் இக்பால் ஹொசைன் எமன், எம்டி அஜீசுல் ஹக்கீம் தமீம் ஆகியோர் தலா 3 விக்கெட்கள் வீழ்த்தினர். (எ)

# 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி ரி-20 தொடர் அயர்லாந்து வசமானது




டாக்கா, டிசெ. 10

பங்களாதேஷுக்கு எதிரான கடைசி போட்டியில் 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அயர்லாந்து அணி ரி - 20 தொடரை கைப்பற்றியது.

அயர்லாந்து மகளிர் கிரிக்கெட் அணி பங்களாதேஷ ில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது. இதில் முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரை 3 - 0 என்ற கணக்கில் பங்களாதேஷ் கைப்பற்றியது. தொடர்ந்து நடைபெற்ற ரி - 20 தொடரில் முதல் ஆட்டத்தில் பங்களாதேஷும், 2ஆவது ஆட்டத்தில் அயர்லாந்தும் வெற்றி பெற்றன.

இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது ரி - 20 போட்டி நேற்று நடைபெற்றது. இந்த போட்டிக்கான நாணயச்சுழற்சியில் வென்ற அயர்லாந்து அணி களத்தடுப்பை தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 123 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

பங்களாதேஷ் தரப்பில் அதிகபட்சமாக சோபனா மோஸ்தரி 45 ஓட்டங்கள் எடுந்தார். அயர்லாந்து தரப்பில் ஓர்லா ப்ரெண்டர்காஸ்ட் 4 விக்கெட்கள் வீழ்த்தினார். தொடர்ந்து 124 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய அயர்லாந்து அணி 19. 5 ஓவர்களில் 6 விக்கெட்களை மட்டும் இழந்து 124 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அந்த அணி சார்பில் அதிகபட்சமாக லாரா டெலானி 36 ஓட்டங்கள் எடுத்தார். பங்களாதேஷ் தரப் பில் ரபேயா கான் 2 விக்கெட்கள் வீழ்த்தினார். இந்த போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் ரி - 20 தொடரை 2 - 1 என்ற கணக்கில் அயர்லாந்து கைப்பற் றியது. (எ)

# 2ஆவது டெஸ்ட் போட்டியிலும் தென்னாபிரிக்க அணி வெற்றி

கெபேஹா, டிசெ. 10

இலங்கைக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியி லும் தென்னாபிரிக்கா அபார வெற்றி பெற்றது.

இலங்கை கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது.

இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கெபேஹாவில் நடைபெற்றது.

இதில் இலங்கைக்கு 348 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், இலங்கை அணியால் 238 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது.

இதனால், 109 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2 - 0 என்ற கணக்கில் கைப்பற்றியது. (எ)

# 5 விக்கெட் வித்தியாசத்தில் மே.இ.தீவுகள் அணி வெற்றி

செயின்ட் கிட்ஸ், டிசெ. 10

பங்களாதே ஷுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் மேற்கு இந்திய தீவுகள் அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மேற்கு இந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண் டுள்ள பங்களா தேஷ் கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் மற்றும் தலா 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற டெஸ்ட் தொடர் 1 - 1 என்ற கணக்கில் சமனில் முடிந்தது.

இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையி லான முதலாவது ஒருநாள் போட்டி நடைபெற்றது.

இதில் நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப் பெடுத்தாடிய பங்களாதேஷ், நிர்ணயிக்கப் பட்ட 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 294 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணி சார்பில் அதிகபட் சமாக மெஹிதி ஹசன் மிராஸ் (74 ஓட்டங்கள்), தன்சீத் ஹசன் (60 ஓட்டங்கள்) மற்றும் மக்மதுல்லா (50 ஓட்டங்கள்) மூவரும் அரைச்சதம் அடித்து அசத்தினர். மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் ரொமாரியோ ஷெப் பர்ட் 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.



இதனையடுத்து 295 ஓட்டங்கள் இலக்கை நோக்கி களமிறங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு தொடக் கம் சரியாக அமையவில்லை. பிரண்டன் கிங் 9 ஓட்டங் களிலும், எவின் லூயிஸ் 16 ஓட்டங்களிலும், அவர்க ளைத் தொடர்ந்து கீசி கார்டி 21 ஓட்டங்களிலும் ஆட்ட மிழந்தனர்.

இந்த இக்கட்டான சூழலில் கை கோர்த்த அணித் தலைவர் ஷாய் ஹோப் - ரூதர்போர்ட் இணை அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றது. ஹோப் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்த ரூதர்போர்ட் அதிரடியாக விளையாடி சதம் அடித்து அசத்தினார். அவர் 113 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஹோப் 86 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இறுதிக் கட்டத்தில் ஜஸ்டின் கிரெவ்ஸ் 41 ஓட்டங்கள் அடித்து அணி வெற்றி பெற உதவினார்.

இந்த நிலையில், 47. 4 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 295 ஓட்டங்கள் எடுத்த மேற்கு இந்திய தீவுகள் அணி, பங்களாதேஷ் அணியை வீழ்த்தி தொடரை வெற்றியுடன் தொடங்கியுள்ளது. (எ)


# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தென்னாபிரிக்கா முதலிடம்

டுபாய், டிசெ. 10

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் தென்னாபிரிக்க அணி முதலிடத்துக்கு முன்னேறியது.

இலங்கையுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 109 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது. இதன் மூலம் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2 - 0 என முழுமையாக கைப்பற்றியது. இதனால் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் தென்னாபிரிக்கா முதல் இடத்துக்கு முன்னேறியுள்ளது.

இந்தப்பட்டியலில் தென்னாபிரிக்கா (63. 33 சதவீதம்) முதல் இடத்திலும், அவுஸ்திரேலியா (60.71 சதவீதம்) 2ஆம் இடத்திலும், இந்தியா (57.29 சதவீதம்) 3ஆம் இடத்திலும், இலங்கை (45.45 சதவீதம்) 4ஆவது இடத்திலும் உள்ளன. இந்தப்பட்டியலில் 5 முதல் 9 இடங்களில் முறையே இங்கிலாந்து (45. 24 சதவீதம்), நியூசிலாந்து (44. 23 சதவீதம்), பாகிஸ்தான் (33.33 சதவீதம்), பங்களாதேஷ் (31. 25 சதவீதம்), மேற்கு இந்திய தீவுகள் (24.24 சதவீதம்) அணிகள் உள்ளன. (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10ஆயிரம்...

இதற்கமைய சிறிய துறைமுகங்களிலிருந்து பல இறக்குமதியாளர்களால் கொள்வனவு செய்யப்பட்ட செய்யப்பட்ட 20, 000 மெற்றிக் தொன் அரிசி எதிர்வரும் வியாழக்கிழமை முன்னர் இலங்கையை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## வரவு...

வீதத்தாலும், ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு குறைந்த வீதத்தாலும் குறைக்கப்பட உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி 17ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வரவு-செலவுத் திட்டத்தை சபையில் சமர்ப்பிக்க உள்ளார்.

வற் வரியை குறைப்பதன் மூலம் அரசாங்கத்துக்கு ஏற்படும் வருமானத்தை ஈடு செய்யும் வகையில் பல மாற்று வருமான யோசனைகள் வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## வழிகாட்டி...

2013 சர்வதேச சுட்டெண்ணில் 79 ஆவது இடத்தில் இருந்த இலங்கை 2023 ஆம் ஆண்டளவில் 115 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. எனவே சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் ஏன் கொண்டாடப்படுகிறது என்று ஜனாதிபதி கேள்வி எழுப்பினார்.

வருடா வருடம் ஊழல் மோசடிகள் அதிகரித்து வருவதாகவும் அடுத்த வருடம் அதனை குறைக்க முடியாவிட்டால் சர்வதேச தின கொண்டாட்டங்களை நடத்துவதில் எவ்வித பயனும் இல்லை எனவும் ஜனாதிபதி அநுரகுமார சுட்டிக்காட்டினார்.

2021ஆம் ஆண்டில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு 69 வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளதுடன் 40 வழக்குகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன. 2022 இல் 89 வழக்குகளை தாக்கல் செய்த இலஞ்ச ஊழல் ஆணைக்குழு 45 வழக்குகளை வாபஸ் பெற்றுள்ளது.

இந்த வழக்குகள் வாபஸ் பெறப்பட்டமைக்கான காரணத்தை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும் எனவும் விசாரணை அதிகாரிகள் வழக்குகளில் சாட்சிகளாகாதது ஏன் என்பதற்கான காரணங்களை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஒரு வருடத்தில் இரண்டு கான்ஸ்டபிள்கள், ஒரு கிராம உத்தியோகஸ்தர் மற்றும் ஒரு எழுதுவினைஞர் ஆகியோர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் தண்டிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் சட்டம் சிலந்தி வலையைப் போன்று செயற்படுவதாக மக்கள் கருதுகின்றனர். மேலும் அந்த வலையில் சிறிய விலங்குகள் சிக்குகின்றன. பெரிய விலங்குகள் சிலந்தி வலையை சேதமாக்கி தப்பிச் செல்வதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை, எமது நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் அரச கட்டமைப்பை மாற்றியமைக்க வேண்டும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவ்வாறு செய்யாமல் ஆரோக்கியமான நாடொன்றை உருவாக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

சட்டத்தை அமுல்படுத்தும் நபர்கள் மற்றும் நிறுவனங்கள் மீதான மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், நீதியை நிலைநாட்டுவதைத் தாமதப்படுத்துவதும் நீதியை நிலைநாட்டுவதாக அமையாது எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

எனவே இலங்கையை குறைந்த இலஞ்சம் பெறும் நாடாக மாற்றுவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் இதன் மூலம் பிரஜைகளின் எதிர்பார்ப்புகளுக்கு மதிப்பை வழங்க முடியும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (அ)

## ஜனவரி...

முதலீடுகளை ஈர்ப்பது, இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களை மீள ஆரம்பிப்பது, கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இவ்விஜயத்தின் போது அவதானம் செலுத்தப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது.

அத்துடன், டில்லி மற்றும் கொழும்புக்கிடையில் கைச்சாத்திடப்படவுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைகள் தொடர்பில் இந்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டுவருகின்றது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். குறிப்பாக மின்சக்தி துறையில் இந்திய முதலீடுகள் பற்றி கூடுதல் கவனம் செலுத்தப்பட வுள்ளது. (அ)

## மதுபான...

வழங்கப்பட்டதாக சபைத் தலைவர் பிமல் ரத்நாயக்க அண்மையில் பாராளுமன்றத்தில் ஆவணங்களை சமர்ப்பித்தார்.

அதற்கு பதிலளிக்கும் வகையில் அறிக்கையொன்றை வெளியிட்டு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரத்துக்குப் பின்னர் 2022 ஆம் ஆண்டுவரை மதுவரி அனுமதிப்பத்திர விநியோகத்துக்கு அரசாங்கம் கட்டணம் எதனையும் அறவிட்டிருக்கவில்லை.

எனவே, நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்கும் பொருட்டு, ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

அதற்கமைய, நேரடி வரியை இழப்பதற்கு மாற்றாக, அரசின் வருமானத்தை அதிகரிப்பதற்குக் கட்டணத்தை அறவிட்டு மதுவரி அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த தேர்தல் காலத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் மதுவரி ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்ட பரிந்துரைகளுக்கமைய, மதுபான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

முந்தைய அரசாங்கம் இலவசமாக எவருக்கும் மதுபான அனுமதிப்பத்திரங்களை வழங்கவில்லை.

எனினும், நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்பதற்காக முன்னெடுக்கப்பட்ட இந்த மதுபான அனுமதிப்பத்திர விநியோக செயற்பாட்டைக் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தியமை கவலையளிப்பதாகவும் என ரணில் விக்ரமசிங்க அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (அ)

## சர்வதேச...

முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கை அரசிடம் நீதி கோரியும் கிடைக்காத நிலையில் சர்வதேசத்திடம் நீதி கோரி போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இதுவரை தீர்வு கிடைக்காத நிலையில் சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் வடக்கு கிழக்கில் பேரணி மற்றும் கவனயீர்ப்பு போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளனர்

அந்தவகையில், திருகோணமலையில் பஸ் தரிப்பிடத்திலும், அம்பாறையில் தம்பிலுவில் மத்திய சந்தையிலிருந்து திருக்கோவில் வரையும், மட்டக்களப்பில் தந்தை செல்வா சிலைப்பகுதியிலிருந்து காந்தி பூங்கா வரையிலும், வவுனியாவில் பஸ் நிலைத்திலும், முல்லைத்தீவில் கச்சேரிக்கு முன்பாகவும், யாழ்ப்பாணத்தில் நல்லை ஆதீனம் முன்பாகவும், கிளிநொச்சியில் கந்தசுவாமி கோவில் முன்றல் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அலுவலக முன்றலிலும், மன்னாரில் பேருந்து நிலைத்திலும் காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ள தாக வலிந்து காணாமல் ஆக்கப்பட் டவர்களின் உறவுகள் அறிவித்துள்ளனர்.

குறித்த போராட்டத்தில் மதத் தலைவர்கள், பொதுமக்கள், மக்கள் பிரிதிநிதிகள்,சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு ஆதரவு தருமாறும் கேட்[illegible] (அ)

மோட்டார் சைக்கிளில் சென்ற

# தாயையும், மகளையும் தள்ளிவிழுத்தி, கைத்தொலைபேசி, பணம் கொள்ளை!

யாழ்ப்பாணம், டிசெ. 10

அல்லைப்பிட்டி பகுதியில் வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த தாயையும், மகளையும் தள்ளிவிழுத்தி, கையடக்க தொலைபேசி, பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன. நேற்று மாலை இந்த சம்பவம் நடந்தது.

கொள்ளையில் ஈடுபட்ட இளைஞர்கள் யாழ்ப்பாண பக்கமாக தப்பிச் சென்றுவிட்டனர்.

இந்த பகுதியில் முன்னர் பொலிஸ் சோதனைச்சாவடி அமைக்கப்பட்டிருந்தது. அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியானதை தொடர்ந்து, வீதியோர பொலிஸ் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டன.

பொலிஸ் சோதனைச்சாவடிகள் அகற்றப்பட்டதை தொடர்ந்து சட்டவிரோத செயற்பாடுகள் தலைவிரித்தாடுகின்றன. அல்லைப்பிட்டி சோதனைச்சாவடி அகற்றப்பட்டதை தொடர்ந்து, இந்த பகுதியில் பெண்களிடம் அடிக்கடி வழிப்பறி நடந்து வருகிறது.

## யாழ்ப்பாணத்தில்...

யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜருள் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அவரது அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய் போன்ற பொலிஸ் நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் 2022 ஆம் ஆண்டிலிருந்து, வீடுகளை உடைத்து நகை மற்றும் பணத்தை திருடிச் சென்ற திருடன் குறித்து நாங்கள் தீவிர விசாரணைகளை மேற்கொண்டிருந்தோம்.

இது தொடர்பான தகவல்களை திரட்டி, குறித்த சந்தேகநபரை கைது செய்வதற்காக, வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக்சீய தனபால மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜயசிங்க ஆகியோர் எனது தலைமையிலான குழு ஒன்றை நியமித்தனர்.

அந்த வகையில் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், மற்றும் யாழ். பொலிஸ் நிலைய குற்றப் புலனாய்வு அதிகாரிகளை நியமித்து இந்தத் திருட்டுச் சம்பவங்கள் குறித்து கணினி மூலமான வரைபடத்தை தயாரித்து அது தொடர்பில் விசாரணை செய்து குறித்த நபரை கொழும்பில் வைத்து கைது செய்தோம்.

இவர் 2022ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை சுமார் 35இற்கும் மேற்பட்ட வீடுகளை உடைத்து திருட்டுக்களை மேற்கொண்டமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. ஆரம்பத்தில் இருவருடன் இணைந்து திருடி வந்த இவர், பின்னர் தனியாக துவிச்சக்கர வண்டியில் சென்று திருட்டுகளை மேற்கொண்டு வந்துள்ளார்.

இவர் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து திருட்டுக்களை மேற்கொண்டு விட்டு அந்த நகைகளை கொழும்பில் விற்பனை செய்து வந்துள்ளார். அந்தவகையில் அவருடன் மேலும் மூன்று சந்தேகநபர்களையும் கைது செய்து தடுப்பில் வைத்திருக்கின்றோம்.

இதுவரை யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட 12 திருட்டுச் சம்பவங்கள் குறித்து இவர் தகவல் வழங்கியுள்ளார். அதுபோன்று கோப்பாய் பொலிஸ் பிரிவிலும் 10இற்கு மேற்பட்ட திருட்டுகள் குறித்து தகவல் தந்துள்ளார். இறுதியாக மேற்கொண்ட இரண்டு திருட்டுகளும் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டதாக காணப்படுகின்றது.

அந்தவகையில் இவரால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட திருட்டுகளின் அடிப்படையில் 66 மில்லியன் ரூபாய் பெறுமதியான சொத்துகளை திருடியுள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. எனவே, யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் இவ்வாறான திருட்டு சம்பவங்கள் இடம்பெறும்போது, திருட்டுக்களில் ஈடுபடுபவர்கள் தொடர்பான தகவல்களை எமக்கு சரியாக வழங்கும் பட்சத்தில் எங்களால் விரைந்து நடவடிக்கைகளை எடுக்க முடியும்"- என்றார். (எ-05)

## மணல் கடத்தலில் ஈடுபட்ட டிப்பர் மடக்கிப் பிடிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 10

பருத்தித்துறையில் இருந்து மணல் கடத்தப்படுவதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மணல் கடத்தலில் ஈடுபட்ட டிப்பரை விசேட அதிரடிப்படையினர் துரத்திச் சென்றனர்.

இதன் போது குறித்த டிப்பர் கொடிகாமம் ஊடாக மந்துவில் பகுதியால் டிப்பர் சென்று கொண்டிருந்தவேளை மண்ணை வீதியில் கொட்டி விட்டு, சாவகச்சேரி - கைதடி வீதியால் தப்பிச் சென்றபோது அவ்விடத்தில் வைத்து டிப்பருடன் சாரதி மடக்கிப் பிடிக்கப் பட்டார். அவர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (5)

## 3 நாள்கள்...

கொண்டு செல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் அவர் மந்திகை வைத்தியசாலையில் மயங்கிய நிலையில் நேற்று காலை, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (அ-05)

## யாழ்...

இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த அவர், சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதாக உறுதியளித்து ஏமாற்றியுள்ளார்.

மூன்று வருடங்கள் பணியாற்றியவர்களுக்கு ஐந்து மாதங்கள் மட்டுமே சம்பளம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. சுகாதாரத் தொண்டர்கள் எனக்கு முறைப்பாடு செய்தார்கள். அதன் பிரகாரமே நான் வைத்தியசாலைக்குச் சென்றேன் - என்றார். (அ)

## ஆலை...

ஆதிக்கத்தை இல்லாமல் செய்வதாக அரசாங்க தரப்பினர் தேர்தல் காலத்தில் கூளுரைத்தார்கள். எனினும் இப்போது அரசியின் விலையை கட்டுப்படுத்த முடியாமல் இருக்கிறார்கள்.

அரசிக்கு 220 என்ற விலை அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டது. எனினும் ஆலை உரிமையாளர்களுடனான சந்திப்பின்போது 230 ரூபாவாக அரசியின் விலையை ஜனாதிபதி நிர்ணயித்துள்ளார். அவர் ஆலை உரிமையாளர்களின் தரகராக செயற்படுகிறார்.

இதேவேளை, பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் மிருகங்களை கொலை செய்யுமாறு விவசாய அமைச்சர் கே.டி. லால்காந்த ஆலோசனை வழங்கியுள்ளார். இவ்வாறானவர்களால் நாட்டை கொண்டு நடத்த முடியுமா?

இந்த விடயங்களை பார்க்கும்போது அரசாங்கம் தனது கடந்த கால செயற்பாடுகளை மீண்டும் முன்னெடுக்க முயற்சிக்கிறதா என்ற சந்தேகம் எழுகிறது - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## கஜேந்திரகுமாரின் வாகனம் மோதி பெண் ஒருவர் மரணம்!

கொழும்பு, டிசெ. 10

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பயணித்த ஜீப் வண்டி மோதுண்டதில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

யாசகத்தில் ஈடுபட்டு வந்த 70 வயதான பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த ஜீப் வண்டியில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் அவரது சாரதி ஆகியோர் நேற்றுமுன்தினம் பிற்பகல் கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது, போலவத்த சந்தியில் வைத்துப் பெண் ஒருவர் ஜீப் வண்டியின் மீது மோதுண்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த யாசக பெண் வென்னப்புவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## பெரும் நெருக்கடியில் சுகாதாரத்துறையினர்!

### ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவர்கள் ஓய்வு

கொழும்பு, டிசெ. 10

மருத்துவர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை தொடர்பில் அரசாங்கம் உடனடியாக தீர்மானங்களை எடுக்கத் தவறினால் சுகாதாரத்துறை பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கும் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

விசேட மருத்துவ நிபுணர்கள் உள்ளிட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவர்கள் இந்த மாத இறுதிக்குள் ஓய்வு பெற உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 63 ஆக வர்த்தமானியில் அறிவிக்கப்படவேண்டுமென அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரியுள்ளது.

மருத்துவர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை 63 இல் இருந்து 60 ஆக குறைப்பதற்கு கடந்த அரசாங்கம் எடுத்த தீர்மானத்துக்கு எதிர்ப்பை வெளியிட்டு 176 மருத்துவர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுதாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுவை பரிசீலனை செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம் ஓய்வு பெறும் வயதெல்லையை 63 ஆக பேணுமாறு உத்தரவிட்டிருந்தது. அமைச்சரவையும் இதற்கு அனுமதி வழங்கியிருந்தது. எனினும் வர்த்தமானி ஊடாக இந்த அறிவிப்பு வெளியிடப்படவில்லை.

நீதிமன்ற தீர்ப்பு வழங்கப்பட்டபோதிலும் இதுவரை வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

## 184,158 சுற்றுலாப் பயணிகள் நவம்பரில் நாட்டுக்கு வருகை



கொழும்பு, டிசெ. 10

இவ்வருடத்தில் நவம்பர் மாதத்தில் 184,158 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, இவ்வருடத்தின் ஜனவரி மாதம் முதலாம் திகதி யிலிருந்து நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் 1,804,873 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேலும், ரஷ்யா, ஜேர்மனி, ஆஸ்திரேலியா, சீனா, ஐக்கிய இராச்சியம் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்தும் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். (அ)

# அத்தியாவசிய உணவுப்பொருட்களை பதுக்கி வைத்தால் கடும் நடவடிக்கை!

### வர்த்தக அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, டிசெம்பர் 10

**அரிசி மற்றும் தேங்காய் உட்பட அத்தியாவசிய உணவுப் பொருட்களை பதுக்கி வைக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தகம், வாணிபம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க எச்சரித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பல்வேறு காரணிகளால் அரிசி மற்றும் தேங்காய் ஆகிய உணவு பொருட்களின் விலை உயர்வடைந்துள்ளன. அரிசி தட்டுப்பாட்டுக்கான குறுகிய காலத் தீர்வாக இந்தியாவில் இருந்து 70 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரதான அரிசி உற்பத்தியாளர்கள் சந்தைக்கு அரிசியை விநியோகிக்கவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளோம்.

அரிசி மற்றும் தேங்காய் உட்பட அத்தியாவசிய உணவு பொருட்களை பதுக்கி வைக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும்.

பண்டிகைக் காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவாது.

பெரும்போக விவசாயத்துக்கு தேவையான வளங்கள் பெற்றுக் கொடுக்கப்படும்.

பண்டிகை காலத்தை முன்னிட்டு அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை குறைக்க உரிய தரப்பினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம் - என்றார். (அ)

# மின்சாரக் கட்டணம் குறையாவிட்டால் ஜனவரியில் நாடு தழுவிய போராட்டம்!

### அநுர அரசுக்கு கடும் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 10

எதிர்வரும் ஜனவரி மாதம் அளவில் மின் கட்டணங்கள் குறைக்கப்படாவிட்டால், நாடு தழுவிய ரீதியில் போராட்டம் முன்னெடுக்கப்படும் என மின் பாவனையாளர் ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் மின்சாரக் கட்டணங்கள் 30 வீதத்தினால் குறைக்கப்படவேண்டுமென ஒன்றியம் தெரிவித்துள்ளது.

உரிய முறையில் கட்டணக் குறைப்பு மேற்கொள்ளப்படாவிட்டால் நாடு முழுவதிலும் மின்சாரப் பயனர்கள் போராட்டத்தில் குதிப்பார்கள் என ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும் அவரது அரசாங்கமும் மின்சாரக் கட்டணங்களை குறைப்பதாக தேர்தல் மேடைகளில் உறுதி வழங்கியிருந்தனர் என அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் கட்டணக் குறைப்பு மேற்கொள்ள முடியும் என கூறிய இலங்கை மின்சார சபை தற்பொழுது கட்டண குறைப்பை மேற்கொள்ள முடியாது என எவ்வாறு கூற முடியும் என அவர் கேள்வி எழுப்பினார்.

நீர் மின் உற்பத்தியும் அதிகரித்துள்ளதாகவும் இவ்வாறான ஓர் பின்னணியில் ஏன் அரசாங்கத்தினால் மின்சாரக் கட்டணத்தை குறைக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## ஜனாதிபதி செயலகத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம்!

கொழும்பு, டிசெ. 10

ஜனாதிபதி செயலகத்தில் அமைந்துள்ள 38 அமைச்சின் திட்ட அலுவலகங்களில் பணியாற்றிய சிரேஷ்ட அதிகாரிகள் குழுவொன்று பொது நிர்வாக அமைச்சுக்கு நியமிக்கப்பட்டு இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்ட உயர் அதிகாரிகளில் 38 திட்ட அலுவலகங்களின் தலைமை இயக்குநர்களும் உள்ளடங்குவதாக கூறப்படுகிறது.

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து அகற்றப்பட்ட 38 திட்ட அலுவலகங்களும் அந்தந்த அமைச்சுக்களில் அமைக்கப்படும் எனவும், இடமாற்ற உத்தரவு பெற்ற உயர் அதிகாரிகள் புதிய நியமனம் வழங்கப்படும் வரை பொது நிர்வாக அமைச்சின் உத்தியோகத்தர் குழுவில் இருப்பர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி செயலகத்தில் பணியாளர்கள் மிகுதியாக இருப்பதால், அங்கு பணியாற்றிய சிரேஷ்ட அதிகாரிகள் குழுவொன்று பொது நிர்வாக அமைச்சின் உத்தியோகத்தர் குழுவில் இணைக்கப்பட்டு இடமாற்ற உத்தரவுகளை வழங்கியதாகவும், சில தொழிற்சங்க அலுவலகங்கள்கூட ஜனாதிபதி செயலகத்தில் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

செலவுகளை மிச்சப்படுத்துவதுடன், குறைந்தபட்ச ஊழியர்களின் கீழ் ஜனாதிபதி செயலகத்தை அரசாங்கம் நடத்துவதே இதன் நோக்கமாகும் என அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இடமாறுதல் உத்தரவு பெற்ற அதிகாரிகள், கல்வி சீர்திருத்தம், வர்த்தக வசதிகள், இலவச வர்த்தக ஒப்பந்தங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் ஒருங்கிணைக்கப்பட்ட பணிகளை மேற்கொண்டுள்ளதாகவும், அந்தந்த அமைச்சுக்களுடன் ஒருங்கிணைப்பது அதிகாரிகளின் கடமை என்றும் வட்டாரங்கள் தெரிவித்தன.

அதிகாரிகள் குழுவுக்கு மாற்றுவதற்கு முன், அனைத்து உத்தியோகபூர்வ கோப்புகளையும் அந்த துறைகள் தொடர்பான அமைச்சுகளுக்கு ஒப்படைக்குமாறு பொது நிர்வாக அமைச்சு அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளது. (அ)

# மின்சார சபை ஊழியருக்கு இம்முறை போனஸ் இல்லை!

கொழும்பு, டிசெ. 10

இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபை தனது ஊழியர்களுக்கான போனஸை இந்த ஆண்டு அங்கீகரிக்கவில்லை என தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் இந்த ஆண்டு போனஸ் வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார்.

முன்னதாக, தான் அரசாங்கத்துடன் இணைந்த தொழிற்சங்கத்தை வழிநடத்துவதாகவும் எனவே ஊழியர்களுக்கு இந்த ஆண்டு போனஸ் கொடுப்பனவு பெற வீதிகளில் இறங்கிப் போராட்டம் நடத்தத் தேவையில்லை என்றும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும், இலங்கை மின்சார சபை தனது ஊழியர்களுக்கான எந்தவொரு போனஸையும் இந்த ஆண்டு அங்கீகரிக்கவில்லை.

அடுத்த வருடத்தின் முதல் பாதியில் மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்படும் என முன்வைக்கப்பட்ட கருத்துக்களையும் இலங்கை மின்சார சபை நிராகரித்துள்ளது.

இந்த வருடத்துடன் ஒப்பிடும் போது, அடுத்த வருடம் அதிகரிக்கக் கூடிய ஒரு பில்லியன் மின்சார அலகுகளின் கூடுதல் தேவையை பூர்த்தி செய்வதற்கு குறைந்த செலவில் எரிசக்தி ஆதாரங்கள் இல்லாததே இதற்கு காரணம் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின் கட்டணத்தில் மூன்றில் இரண்டு பங்கு உற்பத்தி செலவில் இருந்து வருகிறது என மின்சார சபை சீர்திருந்த செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் புபுது நிரோஷன் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.